விஜய்

அன்பளிப்பு


2004 ஓகஸ்ட் 16 திங்கட்கிழமை

# ஒலிம்பிக் தகவல் திரட்டு




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புராதன ஒலிம்பிக் வரலாற்றில்....



நவீன ஒலிம்பிக் விழாவானது 1896ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் புராதன ஒலிம்பிக் விழாவானது கி.மு. 776ம் ஆண்டில் இருந்து நடத்தப்பட்டு வந்துள்ளது. பிறிதொரு பதிவேட்டில் இதன் ஆரம்பம் கி.மு. 1300 என்று இருந்தாலும் இதன் முதலாரம்பம் கி.மு. 771 என்பதற்கான சான்றுகள் உள்ளன.

புராதன கிறிஸ் நாட்டின் 'எல்பியஸ்' என்ற ஆற்றங்கரையில் அமைந்திருந்த ஒலிம்பியஸ் என்ற ஊரில் இவ்விழா முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட படியால் இவ்விழா பின்னர் 'ஒலிம்பிக்ஸ்' என்ற பெயரிலேயே அழைக்கப்படலானது. ஆரம்பத்தில் கிரேக்க தெய்வங்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கத்திலேயே இவ்விழா நடத்தப்பட்டது. ஒலிம்பியஸ் ஊரில் அமைந்திருந்த தெய்வமான 'ஸியுஸ்' என்ற தேவதையை பூஜிக்கும் ஒரு வைபவமாக இது இருந்தது.

வருடம் பூராவும் நிகழ்த்தப்பட்ட இவ்விழாவில் முழு நாடும் கலந்து கொண்டதுடன், ஓர் உயர் தேசிய விழாவாகவும், மத வைபவமாகவும் அமைந்தது.

பிற்காலத்தில் இவ்விழாவானது நாட்டின் ஒற்றுமை, சமாதானம் என்பவற்றுக்கான அடையாளமாகத் திகழ்ந்தது. ஏதும் காரணத்தின் நிமித்தம் நாட்டில் ஒலிம்பிக் விழாக்காலத்தில் யுத்த நிலைமை தோன்றியிருக்குமாயின் இவ்விழா முடிவுறும் வகையில் யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கும் வழக்கத்தினை யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினரும் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடித்தனர்.

> **ஹெலனிக் குடியரசு என்று அழைக்கப்பட்ட முன்னைய 'கிரீஸ்' பற்றி பேசும்போதெல்லாம் கோடிட்டுக்காட்டப்படுவது ஒலிம்பிக் விழாவாகும். ஒலிம்பிக் விழாவின் தாயகமான கிரீசின் ஏதென்ஸ் நகரில் இம்முறை ஒலிம்பிக் விழா நடத்தப்படுவதால் இன்றைய ஒலிம்பிக் மேலும் சிறப்பிக்கப்படுகின்றது.**

ஒலிம்பிக் விழா ஆரம்பிக்கப்படும் பல தினங்களுக்கு முன்பதாகவே இவ்விழாவின் ஆரம்பத்தை அறிவிக்கும் செய்தியுடன் ஒலிம்பியஸ் நகரில் காணப்பட்ட 'ஸியுஸ்' ஆலயத்தில் இருந்து வீரர்கள் நாடெங்கும் அனுப்பப்பட்டனர். இவ்வித வைபவம் ஐந்து நாட்களுக்கு இடம்பெற்றது. முதலாவது நாளைத் தெயவத்துக்குச் செய்யப்படும் பலி பூஜைக்காக ஒதுக்கினர்.

அதன் பின்னர் விழா நடைபெறும் இடத்துக்கு நாடெங்குமிருந்து வந்து சேர்வோர், அப்பிரதேசத்தில் கூடாரங்கள் அமைத்துத் தங்கத் தொடங்குவர். அங்குவரும் மக்களின் பல்வேறு தேவைகளுக்காகவும், மற்றும் வியாபாரிகள் தம் பண்டங்களை விற்பதற்காகவும் அங்காடிகள் அமைப்பர்.

கி.மு. 776ம் ஆண்டு நடத்தப்பட்ட விழாவில் 200 மீற்றர் ஓட்டப் போட்டி மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்துடன் கி.மு.720ம் ஆண்டு வரை இப்போட்டியில் கலந்து கொண்டவர்கள் ஆடை எதுவுமின்றி நிர்வாணமாகவே ஓட அனுமதிக்கப்பட்டதால் இக்காலத்தில் இப்போட்டியைப் பார்ப்பதற்குப் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பின்னர் ஆடை அணிந்து கலந்துகொள்ளலாமென விதிமுறை ஏற்படுத்தப்பட்டது.

விளையாட்டில் வெற்றிபெற்ற வீரனுக்கு ஒலிவ் கிரீடம் சூட்டி கௌரவிக்கப்பட்டது. இவ்விழா ஆரம்பிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு காலம் வரை நிகழ்வுகள் தொடர்பிலான பதிவுகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் பிற்பட்ட காலத்தில் 'ஹிபியாஸ்' என்ற தத்துவஞானி சகல நிகழ்வுகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார். அரிஸ்டோட்டல் காலத்தில் அவரே இப்பணியை ஏற்றுச் செய்து வந்தார்.



கி.பி. 160 - 170 காலத்தில் 'பொஸதியஸ்' என்ற வரலாற்றாசிரியர் ஒலிம்பிக் விளையாட்டு விழா தொடர்பில் நூல் ஒன்றை இயற்றியுள்ளார். இந்நூலின் பிரகாரம் 'லியோனிடாஸ்' என்ற ஒலிம்பிக் வீரர் ஒருசேர 12 போட்டிகளில் வெற்றிபெற்று சாதனை படைத்தமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விதம் 12 போட்டிகளில் வெற்றிபெற்றுச் சாதனை படைத்த வீரனாக 'மிலான்' என்ற மல்யுத்த வீரனும் திகழ்ந்துள்ளான்.

அன்றைய ஒலிம்பிக் விழாக்களில் அனைவரையும் கவர்ந்த நிகழ்ச்சியாக இருந்தது 'பென்கிரேஷன்' என்ற விளையாட்டாகும். இது இன்றைய குத்துச் சண்டை, மல்யுத்தம், கராட்டி முதலானவற்றைக் கலந்துவிளையாடும் ஒரு விளையாட்டாக இருந்தது. இவ்விளையாட்டில் வீரர்கள் ஒருவரை ஒருவர் அடித்து, உதைத்து, வதைத்து வாட்டிக் கொள்வர். இதன் காரணமாக இந்நிகழ்ச்சியைக் கண்டு ரசிக்கப் பெரும் கூட்டம் முண்டியடித்தது. பல சந்தர்ப்பங்களில் இப்போட்டிகள் மரணத்திலேயே முடிவுற்றன.

பிற்காலத்தில் கிரேக்க நாட்டில் உரோமப் பேரரசின் எழுச்சியாலும், கிறிஸ்தவ மதத்தின் வளர்ச்சியாலும் ஐரோப்பா ஆக்கிரமிக்கப்பட்ட போது ஒலிம்பிக் போட்டிகள் செல்வாக்கிழந்தன. கி.பி. 393ம் ஆண்டில் கிரேக்கம், ரோமப் பேரரசின் கீழ் அடிமைப்பட்டதுடன் தியோடோஸியஸ் என்ற அரசன் ஒலிம்பிக் போட்டிகளை முற்றாகத் தடை செய்தான். இவ்விதம் கிரேக்க வரலாற்றில் மிகுந்த பிரபல்யம் பெற்றிருந்த புராதன ஒலிம்பிக் விழா மாய்ந்து மறைந்து போய் 1503 ஆண்டுகள் கடந்த பின்னர் மீண்டும் 1896ம் ஆண்டு, பிரான்சு தேசத்துப் பாதிரியாரான 'பியரி டி குபர்ட்டின்' என்பவரால் நவீன ஒலிம்பிக் போட்டிக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

பிரான்சு தேசத்தின் பாதிரியாரான 'பியரி டி குபர்ட்டின்' என்பவராலேயே நவீன ஒலிம்பிக் விழா ஆரம்பிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஸியுஸ்’ தெய்வத்துக்கு நிகழ்த்தப்பட்ட பூஜை

## ‘ஒலிம்பியா’ நகரின் புராதன ஒலிம்பிக்

பண்டைய கிரேக்கத்தில் ‘ஸியுஸ்’ தெய்வத்துக்கு நிகழ்த்தப்பட்ட பூஜையாகவே ஒலிம்பிக் வைபவம் நிகழ்த்தப்பட்டது. இவ்வைபவத்தினூடாக மக்களும், மன்னனும் தெய்வத்தைப் பூஜித்தனர். இதன் காரணமாக நிகழ்வுகளில் பங்குபற்றிய வீரர்கள் நிர்வாணத்துடனேயே ஏதென்ஸ் வரை சென்றனர். இவ்விதமான முதலாவது விழா கி.மு. 776ம் ஆண்டு இடம்பெற்றுள்ளது. அது பின்னர் தொடர்ந்து கி.பி. 393ம் ஆண்டு வரை நிகழ்ந்துள்ளது.




**1 விளையாட்டரங்கு**
கி.மு.2ம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. ஈட்டி எறிதல், குண்டு எறிதல், தட்டு எறிதல் என்பனவற்றுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டன.

**2 பிரைடெனியா**
கி.மு.2ம் நூற்றாண்டளவில் ஏற்படுத்தப்பட்டது. இது விளையாட்டுப் பூமியின் காப்பாளரின் வசிப்பிடமாகும். இங்கு உலோக அடுப்பு ஒன்று இருந்தது. அது எப்போதும் எரிந்து கொண்டிருக்கும். விளையாட்டு வீரர்கள் குளிப்பதற்கும் பிரைடெனியாவைப் பயன்படுத்தினர்.

**3 பெலஸ்திரா**
கி.மு.3ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. மல்யுத்தம், குத்துச்சண்டை, உயரம் பாய்தல் என்பனவற்றுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**4 குளியல் மண்டபம்**
கி.மு.5ஆம் நூற்றாண்டளவில் ஏற்படுத்தப்பட்டது. விளையாட்டின் பின் வீரர்கள் இங்கே நீராடினர்.

**5 ஹெரா தேவதையின் ஆலயம்**
கி.மு.7ஆம் நூற்றாண்டின் அரைவாசிப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. சியுஸ் தெய்வத்தின் பெண் துணையான ஹெரா தேவதைக்காகக் கட்டப்பட்டது.

**6 பிலிப்பின்**
கி.மு. 4ஆம் நூற்றாண்டின் அரைவாசிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு மகா அலெக்சாண்டரால் கட்டி முடிக்கப்பட்டது. மெசிடோனிய அரசு காலத்தில் முன்னைய வீரர்களை நினைவு கூருவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.


**7 பிடியஸின் வேலைத்தலம்**
சியுஸ் ஆலயத்திற்குத் தேவையான சிலைகள், கருவிகள் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

**8 லியோனி டெனிஸ்**
கி.மு. 4ஆம் நூற்றாண்டளவில் அமைக்கப்பட்டது. வெளிநாட்டுப் பிரதானிகள், அதிகாரிகள் இங்கு தங்க வைக்கப்பட்டனர்.

**9 பிலோபஸின் வீட்டுத்தோட்டம்**
கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் ஏற்படுத்தப்பட்டது. பண்டைய ஒலிம்பிக் வைபவத்தை ஆரம்பித்து வைத்தவனான பிலோப்பஸ் வீரனுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

**10 சிறு ஆலயம்**
கிரேக்க நகர் மற்றும் குடியிருப்புக்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசம்.

சியுஸ் ஆலயம்
கிரேக்க தெய்வங்கள் மத்தியில் பிரதான தெய்வமாகக் கருதப்படும் சியுஸிற்காக இவ்வாலயம் லிஸ்லியொன் என்பவரால் கட்டப்பட்டது. முற்றாகச் சுண்ணாம்பு பூசி மெழுகப்பட்டிருந்ததுடன் கூரை மற்றும் விக்கிரகங்கள் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருந்தன. இதன் நீள அகலங்கள் 68 மீற்றர், மற்றும் 28 மீற்றர் என்ற பிரமாணத்தில் இருந்தன.




**11 மெட்ரோன்**
கி.மு. 4ஆம் நூற்றாண்டளவில் அமைக்கப்பட்டது. ‘சிபெலா’ என்ற தாய்த் தேவதைக்காக அர்ப்பணிக்கப்பட்டது.

**12 சியுஸ் ஆலயத்தின் பலிபீடம்**
ஏற்படுத்தப்பட்ட காலம் தெரியவில்லை. சியுஸ் தெய்வத்திற்காகப் பூஜை செய்யப்பட்ட கட்டிடம்.

**13 சியுஸ் ஆலயம்**
கி.மு. 5ஆம் நூற்றாண்டளவில் ஏற்படுத்தப்பட்டது. உலகின் ஏழு புதுமைகளில் ஒன்றாகக் கருதப்பட்ட இது யானைத் தந்தத்துடனான ஒரு சிலையாகும். வெற்றி பெற்ற வீரர்கள் இங்கு வைத்து ஒலிவ் கிரீடம் சூட்டப்பட்டனர்.

**14 பௌலோதேரியன்**
கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கும் 5ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு பாகங்களாக இருந்த கட்டிடத்தில் ஏதென்ஸ் வாசிகள் பலிபீடத்திற்கு வந்து பூஜை செய்தனர்.

**15 விளையாட்டுத் திடல்**
கி.மு. 5ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஓட்டக் களத்தின் நீளம் 21254 மீற்றராக இருந்ததுடன் அகலம் 28.5 மீற்றராக இருந்தது. 45,000 பார்வையாளர்கள் அமர முடிந்தது.

**16 ஸ்டோவா சுவர்**
கி.மு.350இல் கட்டப்பட்டது. விளையாட்டுப் பூமியின் கிழக்கு எல்லையில் கட்டப்பட்டிருந்த இச்சுவரில் மோதும் மக்களின் கூக்குரல்கள் 5 மடங்கு அதிகரித்து எதிரொலித்ததாகக் கூறப்படுகின்றது.

**17 ஆட்டெம்ஸின் பலிபீடம்**
கி.மு. 3வது மற்றும் 2ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. வேட்டைக் கடவுளான ஆட்டெம்ஸுக்கு இங்கு பூஜை செய்யப்பட்டது.

**18 தென் மூலைச் ஸ்டோவா சுவர்**
கி.மு. 350இல் ஏற்படுத்தப்பட்டது. விளையாட்டுப் பூமியின் தெற்கு எல்லையாக இது காணப்பட்டது.

REUTERS

முதலாவது ஒலிம்பிக் விழா கி.மு.776 ஆண்டு இடம்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1896 - ஏதென்ஸ்

நவீன உலகின் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி முதன்முதலில் 1896ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி கிரீஸ் நாட்டின் அதன் மன்னரான முதலாவது ஜோர்ஜ் அரசரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் 13 நாடுகளைச் சேர்ந்த 311 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினார்கள்.

இவ்விழாவில் பெண்கள் கலந்துகொள்ளவில்லை. விளையாட்டு நிகழ்ச்சியொன்றில் முதலாவது ஸ்தானத்தைப் பெற்ற வீரருக்கு தங்கப் பதக்கமொன்றும் ஒலிவ் கிரீடமும் பரிசாகச் சூட்டப்பட்டன. இரண்டாவது இடத்தை வென்றவருக்கு வெள்ளிப் பதக்கமொன்றும் லோரல் இலைகளினால் செய்யப்பட்ட கிரீடமொன்றும் சூட்டப்பட்டது. விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய சகல வீரர்களுக்கும் ஞாபகார்த்தப் பதக்கமொன்றும் அளிக்கப்பட்டது. நவீன ஒலிம்பிக் போட்டியின் முதலாவது வெற்றியாளராக அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் கொனலி என்பவர் சாதனை படைத்தார். இவ்வைபவத்தில் முதலாவது நிகழ்ச்சியாக 13.71 மீ. ஓட்டப் போட்டியே அமைந்தது.


ஜேம்ஸ்

### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 11 | 07 | 01 |
| கிரீஸ் | 10 | 19 | 17 |
| ஜேர்மனி | 07 | 05 | 02 |

## 1900 பரிஸ்

ஒலிம்பிக் போட்டிகளில் இவ்வாண்டிலேயே முதன் முதலில் பெண் வீராங்கனைகள் கலந்துகொண்டனர். இப்போட்டியில் 20 நாடுகளைச் சேர்ந்த 1000 வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர். மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட போட்டிகள் ஒக்டோபர் மாதம் வரை நடைபெற்றன.

டெனிஸ் மற்றும் கோல்ப் ஆகிய போட்டிகளில் மாத்திரமே பெண்கள் கலந்து கொண்டனர். டெனிஸ் போட்டியில் வெற்றிபெற்ற இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லட் கூப்பர் என்பவரே ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிபெற்ற முதலாவது பெண் வீராங்கனையாவார். 60 மீ. 110 மீ. தடை தாண்டல் போட்டி, 200 மீ. ஓட்டப் போட்டி, உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற அமெரிக்க வீரர் அல்வின் கிரேன்ஸ்லின் நான்கு தங்கப் பதக்கங்களை வென்றார்.


சார்லட் கூப்பர்

### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| பிரான்ஸ் | 27 | 35 | 34 |
| அமெரிக்கா | 19 | 15 | 16 |
| இங்கிலாந்து | 17 | 08 | 12 |

## 1904 சென்லூயி

இரண்டாவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்ட போதும் பின்னர் தீர்மானம் மாற்றப்பட்டு சென் லூயி நகரில் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் 12 நாடுகளைச் சேர்ந்த 680 வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரர் அன்டன் ஹெய்டா 5 தங்கப் பதக்கங்களும் ஒரு வெள்ளிப் பதக்கமும் வென்று சாதனை படைத்தார். மேலதிகமாக அமெரிக்காவைச் சேர்ந்த குறுந்தூர ஓட்டவீரர் ஆர்ச்ஹாஹ்ன் என்பவர் 60 மீ. 100 மீ. மற்றும் 200 மீ. போட்டிகளில் மிக இலகுவாக வெற்றி பெற்றார். அமெரிக்காவைச் சேர்ந்த மற்றொரு வீரரான ஜேம்ஸ் லைட் போடி என்பவர் 800 மீ. 1500 மீ. 2500 மீ. தடை தாண்டல் போட்டி ஆகிய போட்டிகளில் வென்று தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.


ஆர்ச்ஹாஹ்ன்

### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 70 | 74 | 67 |
| கியூபா | 05 | 02 | 03 |
| ஜேர்மனி | 04 | 04 | 00 |

## 1908 லண்டன்

இவ்விழா இத்தாலியின் உரோம் நகரில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்ட போதும் வெசுவியஸ் என்ற இடத்தில் எரிமலை ஒன்று வெடித்து இத்தாலிக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதன் காரணமாக அது லண்டன் நகருக்கு மாற்றப்பட்டது. இவ்வாண்டின் வைபவங்களில் 22 நாடுகளைச் சேர்ந்த 2000 வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர். இவ்விழாவிலேயே முதன்முதலாகப் பங்குபற்றிய நாடுகளின் தேசியக் கொடிகள் மைதானத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. எனினும் அமெரிக்கா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் கொடிகள் அங்கு இல்லாமல் இருந்ததால் அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

பிறப்பால் போலியோ நோயாளியான அமெரிக்காவைச் சேர்ந்த ரேமண்ட் ஏவ்ரி என்பவர் உயரம் பாய்தல், நீளம்பாய்தல் என்ற இரண்டு போட்டிகளிலும் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றார். இவர் 1900, 1904 ஆகிய ஆண்டுகளில் பெற்ற தங்கப் பதக்கங்களுடன் மொத்தம் 10 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இங்கிலாந்து | 57 | 50 | 40 |
| அமெரிக்கா | 23 | 12 | 11 |
| சுவீடன் | 08 | 06 | 11 |

## 1912 - ஸ்டொக்ஹோம்

இவ்விழாவை சுவீடன் நாடு மிக ஒழுங்காக ஏற்பாடு செய்திருந்தது. ஓட்டக்காரர்களுக்கிடையே சரியாக இருந்த நேரத்தை அளவிடும் முறைகளும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

ஸ்டொக்ஹோம் ஒலிம்பிக் விழாவில் 28 நாடுகளைச் சேர்ந்த 2500 வீரர்களும் வீராங்கனைகளும் பங்குபற்றினர். பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹன்னஸ் கோலமைனன் என்பவர் 5000 மீ. 10,000 மீ. 8000 மீ. ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். ரஷ்யாவைச் சேர்ந்த மார்டின் கிளைன் மற்றும் பின்லாந்தைச் சேர்ந்த அல்பிரெட் அசிகைனன் ஆகியோர் மத்தியில் இடம்பெற்ற மல்யுத்தப் போட்டி தொடர்ச்சியாக 11 மணி நேரம் நடைபெற்றது. இறுதியில் கிளைன் வெற்றி பெற்றார். 100 x 4 மற்றும் 400 மீ x 4 ஆகிய ஓட்டப் போட்டிகள் முதன் முறையாக ஒலிம்பிக்கில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதில் 100 x 4 ஓட்டப் போட்டியில் இங்கிலாந்தும் 400 x 4 ஓட்டப் போட்டியில் அமெரிக்காவும் வெற்றிபெற்றன.


அண்ணல்கோல்

### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 27 | 19 | 19 |
| சுவீடன் | 24 | 24 | 17 |
| இங்கிலாந்து | 10 | 15 | 00 |

## 1920 என்ட்வெர்ப்

முதலாவது உலக மகா யுத்தம் காரணமாக ஜேர்மனியின் பேர்லின் நகரில் இடம்பெறவிருந்த 1916ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் விழா இடம்பெறவில்லை. இதன் காரணமாக 1920ஆம் ஆண்டுக்கான விழாவை நடத்தும் சந்தர்ப்பம் பெல்ஜியத்துக்குக் கிடைத்தது. இவ்விழாவில் 29 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2500 வீரர்கள் பங்குபற்றினர்.

முதலாம் உலகப் போரில் ஈடுபட்ட ஜேர்மனி, ஒஸ்ரியா, பல்கேரியா, துருக்கி மற்றும் ஹங்கேரி முதலான நாடுகள் இதில் கலந்து கொள்ளவில்லை. 100 மீ. ஆண்கள் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட அமெரிக்க நாட்டவரான சார்லி பெடொக் 1945ஆம் ஆண்டு இடம்பெற்ற 2ஆம் உலக யுத்தத்தின் போது விமான விபத்தில் பலியானார். ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிபெற்றுப் பல சாதனைகள் செய்த பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓட்ட வீரர் பாவோ நூர்மி இவ்விழாவில் தனது முதல் சாதனையை ஏற்படுத்தியிருந்தார். இதில் அவர் 5000 மீ. மற்றும் 10,000 மீ. ஓட்டப் போட்டிகளில் சாதனை படைத்தார்.



### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 41 | 27 | 28 |
| சுவீடன் | 19 | 20 | 26 |
| இங்கிலாந்து | 15 | 15 | 13 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1924 பரிஸ்

1900ஆம் ஆண்டில் இரண்டாவது ஒலிம்பிக் விழா நடைபெற்ற பின், 1924ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாக இவ்விழாவை நடத்தும் சந்தர்ப்பம் பாரிஸுக்குக் கிடைத்தது. இவ்விழாவில் 44 நாடுகளைச் சேர்ந்த 3000 வீர, வீராங்கனைகள் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டனர். பின்லாந்தைச் சேர்ந்த பாவோ நூர்மி இம்முறையும் மீ. 1500, மீ 5000, மீ 3000 ஆகிய ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றார். அதேபோல் மீ 10,000, மீ 3000 தடைதாண்டும் போட்டிகளிலும் பங்குபற்றிய வீரரான வில் ரிட்டோலா என்பவர் வெற்றிபெற்றுத் தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. டைட்டானிக் கப்பல் அத்திலாந்திக் கடலில் மூழ்கியபோது அதில் இருந்து தப்பி பிழைத்தவரான அமெரிக்காவைச் சேர்ந்த நொரிஸ் வில்லியம்ஸ் என்பவர் இவ்விழாவில் டெனிஸ் போட்டியில் வெற்றிபெற்றுத் தங்கப் பதக்கம் வென்றது முக்கிய அம்சமாகும்.



வில்லி

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 45 | 27 | 27 |
| பின்லாந்து | 14 | 13 | 10 |
| பிரான்ஸ் | 13 | 15 | 10 |

## 1928 அம்ஸ்டர்டாம்



பர்ஸி

நெதர்லாந்தில் இடம்பெற்ற இவ்விழாவைக் கோலாகலமாக நடத்தும் பொருட்டு இந்நாட்டுக் கட்டிடக்கலை ஒன்றை நோக்கி 40,000 பேர்களுக்கு ஆசனம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அத்துடன் தொடர்ச்சியாக விழா முடியும் வரை ஒலிம்பிக் பந்தம் அணையாமல் விட்டு எரிந்து கொண்டே இருக்கும் விதத்தில் முதன் முறையாக ஏற்பாடுகள் இவ்விழாவிலேயே செய்யப்பட்டிருந்தன. இவ்விழாவில் 46 நாடுகளைச் சேர்ந்த 2750 வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர். கனடாவின் வன்கூவரில் பிறந்தவரான பர்சி வில்லியம்ஸ் 100 மீ, 200 மீ ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றித் தங்கப் பதக்கம் வென்றார். வரலாற்றில் முதன்முறையாக ஆசிய நாடொன்றான ஜப்பானைச் சேர்ந்த மிக்கியோ ஓடா தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. பெண்களுக்காக முதன்முதலாக இடம்பெற்ற 100 மீ ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த 16 வயதான எலிசபெத் றொபின்சன் முதலிடத்தைப் பெற்றார்.

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 22 | 18 | 16 |
| ஜெர்மனி | 10 | 07 | 14 |
| இங்கிலாந்து | 08 | 08 | 09 |

## 1932 லொஸ் ஏஞ்சல்ஸ்

ஒலிம்பிக் போட்டிகளை ஒலிம்பிக் கிராமமொன்றில் நிகழ்த்தும் எண்ணக்கரு முதன் முதலாக இந்த விழாவிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விழாவுக்காக வருகை தந்திருந்த பங்குபற்று வீர, வீராங்கனைகளுக்குத் தனித்தனியாகத் தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்தன. பொருளாதாரப் பிரச்சினைகளின் நிமித்தம் இவ்விழாவில் 38 நாடுகளைச் சேர்ந்த 1200 பேர் மட்டுமே போட்டிகளில் பங்குபற்றினர். குறுந்தூர ஓட்டப் பந்தயத்தைக் கண்காணிக்கவென முதல் முறையாக நவீன தொழில்நுட்பத்துடனான கெமரா பயன்படுத்தப்பட்டது. இவ்விழாவின் போது இலகுவாகப் போட்டி வென்ற அயர்லாந்து நாட்டவரான பொப் டிஸ்டோல் 400 மீ. தடை தாண்டல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றார். நீச்சல் போட்டிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் 16 தங்கப் பதக்கங்களில், 11 பதக்கங்களைவென்று ஜப்பானைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பெரும் சாதனை படைத்தனர்.



பொபி

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 41 | 32 | 30 |
| இத்தாலி | 12 | 12 | 12 |
| பிரான்ஸ் | 10 | 05 | 04 |

## 1948 லண்டன்



பெனி


இரண்டாம் உலக மகா யுத்தத்தின் நிமித்தம் 1940, 1944ஆம் ஆண்டுகளில் இடம்பெறவிருந்த ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவில்லை. 1940ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் விழா ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரிலாகும். என்னும் 2ஆம் உலக யுத்தத்தில் ஜப்பான் பெரிதும் அழிவுக்குட்படுத்தப்பட்டதால் 1948ஆம் ஆண்டு விழா இங்கிலாந்தில் லண்டனில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. விழா ஆரம்பிக்கப்பட்ட போது யுத்த நிலைமையே காணப்பட்டபோதும் இவ்விழாவில் கலந்துகொள்ள 58 நாடுகளில் இருந்து 3750 வீரர்களும், வீராங்கனைகளும் வந்திருந்தனர். இவர்களுக்கு இராணுவ முகாம்களிலேயே தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்தன. இலங்கை இவ்வாண்டிலேயே முதன்முறையாக ஒலிம்பிக் பந்தயங்களில் பங்குபற்றியது. இவ்விழாவில் 400 மீற்றர் தடையோட்டப் போட்டியில் இலங்கை வீரர் டன்கன் வைற் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கமொன்றைப் பெற்றுக் கொடுத்தார். நெதர்லாந்தைச் சேர்ந்த பெனி பிளாங்கர்ஸ் 100 மீ. 200 மீ. 100 x 4 மீ. பெண்கள் ஓட்டப் போட்டிகளில் வென்று 3 தங்கப் பதக்கங்கள் வென்றார்.

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 38 | 27 | 19 |
| சுவீடன் | 16 | 11 | 17 |
| பிரான்ஸ் | 10 | 06 | 13 |

## 1936 பேர்லின்

ஜேர்மனியின் பேர்லின் நகரில் இடம்பெற்ற இவ்விழாவினைப் பல நாடுகளும் பகிஷ்கரித்தன. இதற்குக் காரணம் சர்வாதிகாரியான அடொல்ப் ஹிட்லர் கடைப்பிடித்த ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கையாகும். இவ்விழாவிலேயே முதன் முறையாக கிரீசில் இருந்து ஒலிம்பிக் பந்தமானது விழா நடக்கும் நாட்டிற்குக் கொண்டு செல்லும் வழக்கம் ஆரம்பமானது. அத்துடன் முதன் முதலாகத் தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. 100 மீ ஓட்டப் பந்தயத்தில் மாத்திரம் 50 பேர் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் கலந்துகொண்ட அமெரிக்க வீரரான ஜெசி ஓவன்ஸ் 12.2 செக்கன்களில் ஓடிமுடித்துப் புதிய சாதனை நிலைநாட்டினார். ஒஸ்ட்ரியா, பேரு நாடுகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின்போது பேரு நாட்டின் ஆதரவாளர்கள் ஒஸ்ட்ரியா வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் பேரு வெற்றி பெற்றாலும் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதால் பந்தயத்தை மீண்டும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு இணங்காத பேரு குழுவினர் பந்தயத்தைப் பகிஷ்கரித்து நாடு திரும்பினர். பந்தயத்தில் ஒஸ்ட்ரியா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.


ஓவன்ஸ்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ஜெர்மனி | 33 | 26 | 30 |
| அமெரிக்கா | 24 | 20 | 12 |
| ஹங்கேரி | 10 | 01 | 05 |

## 1952 ஹெல்சிங்கி



லின்ட்

பின்லாந்து பல தடவைகள் ஒலிம்பிக் போட்டிகளில் தன் திறமையை வெளிப்படுத்தியிருந்தது. இந்நாட்டு வீரரான பாவோ நூர்மியின் திறமையை கௌரவிக்கு முகமாக ஒலிம்பிக் பந்தம் ஏந்தும் சந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்பட்டது. ஹெல்சிங்கி ஒலிம்பிக் விழாவில் பங்குகொள்ளும் பொருட்டு 69 நாடுகளைச் சேர்ந்த 4500 பேர் வருகை தந்தனர். 40 வருடங்களாக இவற்றில் பங்குபற்றாமல் இருந்த ரஷ்யாவும் கலந்துகொண்டது. இவ்விழாவில் 100 மீ. ஓட்டப் போட்டி மிகக் கடுமையான போட்டிக்கு மத்தியில் நிகழ்ந்தது. நான்கு வீரர்கள் சரியாக 10.4 செக்கன்களில் போட்டியைப் பூர்த்தி செய்தனர். இதனால் போட்டோ பினிஷ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த குறுந்தூர ஓட்ட வீராங்கனை மார்ஜரி ஜெக்சன் 100 மீ. 200 மீ. ஓட்டப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றார். பிரான்ஸ், உருகுவே ஆகிய நாடுகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் தகராறு ஏற்பட்டபோது உருகுவே வீரர்கள் போட்டி நடுவரைத் தாக்கினர். இதனால் அந்நாட்டு வீரர்கள் இருவருக்கு ஆயுட்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 40 | 19 | 17 |
| ரஷ்யா | 22 | 30 | 19 |
| ஹங்கேரி | 16 | 10 | 16 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1956 மெல்பர்ன்

பிரித்தானியாவின் மகாராணியும் எடின்பரோ கோமகனும் இணைந்து இவ்விழாவினை மெல்பர்ன் நகரில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். இவ்விழாவில் 67 நாடுகளைச் சேர்ந்த 2800 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர். அமெரிக்காவைச் சேர்ந்த பொப் மோரோ 100 மீ. 200 மீ. மற்றும் 100 × 4 மீ. ஆகிய மூன்று ஓட்டப் போட்டிகளில் வென்று மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். ரஷ்யாவின் திறமைமிக்க விளையாட்டு வீரரான விக்டர் புகாரிக் மூன்று தங்கப் பதக்கங்களையும் வெள்ளிப் பதக்கம் ஒன்றையும் வெண்கலப் பதக்கமொன்றையும் வென்றார். இவர் 1952ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது 6 பதக்கங்களை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஒலிம்பிக் போட்டிகளின் முடிவின்போது இடம்பெறும் வைபவத்தில் நாடுகளின் குழுக்கள் தனித்தனிக் குழுக்களாகவே கலந்துகொள்வது வழக்கம். ஆனால் மெல்பர்ன் ஒலிம்பிக் விழாவின் போது எல்லா நாட்டு வீரர்களும் ஒரேசோ அரங்கத்திற்கு வந்து கலந்துகொண்டனர்.


பேட்

### பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்யா | 37 | 29 | 32 |
| அமெரிக்கா | 32 | 25 | 17 |
| அவுஸ்திரேலியா | 13 | 08 | 14 |

## 1960 உரோம்

1960ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியினை நடாத்தும் சந்தர்ப்பத்தை உரோமிற்கு வழங்க இத்தாலி சிறிதும் அக்கறை காட்டவில்லை. இதற்குக் காரணம் வரலாற்றுக் காலத்தில் கிரேக்கத்தில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த இத்தாலியின் பேரரசர் தியோடியஸ் தடை விதித்திருந்தமை ஆகும். இருந்தபோதும் உரோம் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் விழாவில் 84 நாடுகளும், 4750க்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகளும் கலந்து கொண்டனர். 100 மீ. ஆண்கள் ஓட்டப் பந்தயத்தின் போது 10.2 செக்கன்களில் ஓடிமுடித்த ஜேர்மனியைச் சேர்ந்த ஆமின்ஹெரி என்பவர் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். இப்போட்டியில் ஆங்கிலம் பேசாத நாட்டைச் சேர்ந்த ஒருவர் வெற்றிபெற்றமை இது முதல் தடவையாகும். அமெரிக்காவில் மிக ஏழை குடும்பத்தில் உதித்த வில்மா ருடோல்ப் என்பவர் உரோம் ஒலிம்பிக் விழாவிற்கு 20 வயதான தாரகையாக வந்திருந்தார். அவர் இவ்விழாவில் 100 மீ., 200 மீ., 100 x 4 மீ. ஆகிய ஓட்டப் பந்தயங்களில் வென்று மூன்று தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்தார்.

எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த மரதன் ஓட்ட வீரர் அபிபி பெக்கேலா அப்பந்தயத்தில் பாதணிகள் இன்றி ஓடித் தங்கப் பதக்கத்தை வென்றமை பலராலும் பேசப்பட்டது.


ஹபிப் பெக்கேலா

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்யா | 43 | 29 | 31 |
| அமெரிக்கா | 34 | 21 | 16 |
| இத்தாலி | 13 | 10 | 13 |

## 1964 டோக்கியோ

ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக ஆசியாக் கண்டத்து நாடொன்றில் ஒலிம்பிக் விழா நடைபெற்றமை 1964ஆம் ஆண்டிலாகும். இவ்விழா இதுவரை நடைபெற்ற அனைத்து விழாக்களிலும் பார்க்க மிகவும் அலங்காரமாகவும், விமரிசையாகவும் இடம்பெற்றது. இரண்டாவது உலக யுத்தத்தினால் பாரிய அளவு பாதிக்கப்பட்டிருந்த ஜப்பான் இந்தளவு முன்னேறியிருந்தமையைப் பார்த்து பலரும் ஆச்சரியப்பட்டனர். இந்த விழாவின் ஒரு விசேட அம்சம் ஹிரோசிமா அணுக் குண்டுத் தாக்குதலிலிருந்து உயிர் தப்பிய இளைஞனைக் கொண்டு ஒலிம்பிக் தீபத்தை ஏற்றியமை ஆகும். அமெரிக்காவைச் சேர்ந்த றொபர்ட் ஹேஸ் என்பவர் 100 மீ ஓட்டப் பந்தயத்தை 10 செக்கன்களில் ஓடி முடித்து இவ்விழாவில் உலக சாதனையை ஏற்படுத்தினார். அத்துடன் அமெரிக்க கறுப்பின வீராங்கனையான வயோமியா டயஸ் 100 மீ. ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கமொன்றையும் வென்றார். பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த டமரா பிரேஸ் தங்கப் பதக்கத்தையும், அவரது சகோதரியான ஐரினா பிரேஸ் ஐந்து அம்சப் போட்டியில் தங்கப் பதக்கமொன்றைப் பெற்றுக்கொண்டனர்.


றொபர்ட்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 36 | 26 | 28 |
| ரஷ்யா | 30 | 31 | 35 |
| ஜப்பான் | 16 | 05 | 08 |

## 1968 மெக்ஸிக்கோ

உலகின் உயரமான இடத்தில் இடம்பெற்ற ஒலிம்பிக் விழாவாக மெக்ஸிக்கோ ஒலிம்பிக் வைபவம் அமைந்தது. இவ்விழா மெக்ஸிக்கோ நாட்டின் கடல் மட்டத்தில் இருந்து 2240 மீற்றர் உயரத்தில் அமைந்த இடத்தில் நிகழ்ந்தது. இது தொடர்பில் பலரும் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். இதற்குக் காரணம் இத்தகைய உயரத்தில், காற்றழுக்கம் அதிகரிப்பால் ஒக்ஸிசன் வீழ்ச்சியடைவதால் வீரர்கள் அதிக தண்ணீர்த் தாகத்திற்கு உள்ளாவர் என்பதாகும். எனினும் இவ்விழாவில் 113 நாடுகளில் இருந்து 4750 வீரர்கள் பங்குபற்றினர். 100 மீ. ஓட்டப் போட்டியில் முந்திய போட்டியில் ஏற்படுத்தப்பட்டிருந்த 10 செக்கன் உலக சாதனையை, அதற்குக் குறைந்த நேரத்தில் பூர்த்தி செய்து, அமெரிக்க வீரர் ஜிம் 9.9 செக்கன்களால் புதிய சாதனையை நிலைநாட்டினார். இச்சாதனை தொடர்ந்து 15 வருடங்கள் முறியடிக்கப்படாமல் இருந்தது.


பீமன்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 45 | 28 | 34 |
| ரஷ்யா | 29 | 32 | 30 |
| ஜப்பான் | 11 | 07 | 07 |

## 1972 மியூனிச்

இந்த ஒலிம்பிக் விழா இதுவரை நடைபெற்ற எல்லா ஒலிம்பிக் விழாவிலும் பார்க்க சோகம் மிகுந்ததாக அமைந்தது. இவ்விழாவில் பங்குபற்ற வந்திருந்த 11 இஸ்ரேலிய வீரர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக இவ்விழாவை இடைநிறுத்தும்படி கோரப்பட்ட போதும் ஏற்பாட்டாளர்கள் விழாவைத் தொடர்ந்தும் நடத்தி முடித்தனர். இவ்விழாவில் தான் முதன் முதலில் எலக்ரோனிக் காலக் கணக்கீட்டு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இதுவரை அமெரிக்காவின் வசம் இருந்த 100மீ, 200மீ, ஓட்டப் பந்தயச் சாதனைகள் இம்முறை ரஷ்யாவின் வெவரி போஸோ என்பவரால் முறியடிக்கப்பட்டன. 100 மீ. பெண்களுக்கான ஓட்டப் பந்தயத்தில் கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த ரெனேட்ஸ்டேவர் வெற்றிபெற்றார்.


ரெனேட்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்யா | 50 | 27 | 22 |
| அமெரிக்கா | 33 | 31 | 30 |
| கி. ஜெர்மனி | 20 | 23 | 23 |

## 1976 மொன்ட்றியல்

உலக வரலாற்றில் இடம்பெற்ற முறைக்கேடுகள் நிறைந்த ஒலிம்பிக் விழாவாக இது அமைந்தது. இங்கு ஒலிம்பிக் கிராமம் ஒன்றை அமைப்பதற்காக அடிப்படைச் செலவாக 310 மில்லியன் டொலர் மதிப்பிடப்பட்டிருந்த போதும், கட்டி முடிக்கப்பட்டபோது பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் காரணமாக அது 1400 மில்லியன்களாக அதிகரித்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கனடாவின் மொன்றியல் நகரில் இடம்பெற்ற இவ்விழாவில் 88 நாடுகளைச் சேர்ந்த 6000 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இவ்விழாவிலும் அமெரிக்கா 100 மீ, ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் பெறத் தவறியது. இப்போட்டிக்கான தங்கப் பதக்கத்தை டிரினிடாட் நாட்டைச் சேர்ந்த ஹேஸ்லி குரோப்ட் வென்றெடுத்தார். கியூபாவைச் சேர்ந்த அல்பர்ட்டோ ஜுவன்டோரினா 400 மீ, 800 மீ. ஓட்டப் பந்தயங்களில் வெற்றிபெற்றார். கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனைகள் 13 நீச்சல் போட்டிகளில் 11 போட்டிகளில் வெற்றிபெற்றுத் தங்கப் பதக்கங்களை வென்றனர்.


அல்பர்ட்டோ

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 40 | 24 | 33 |
| ரஷ்யா | 32 | 28 | 28 |
| சீனா | 28 | 16 | 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1980 மொஸ்கோ


சில்விக்கோ

இவ்வாண்டு ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் விழாவினை அமெரிக்கா பகிஷ்கரிப்புச் செய்தது. உலகின் இரண்டு பெரும் வல்லரசுகளான ரஷ்யாவும், அமெரிக்காவும், அவர்கள் இதுவரைக் காலம் செய்துவந்த பனிப்போரின் உச்சக் கட்டத்தை இக்காலகட்டத்தில் அடைந்திருந்தனர்.


ரஷ்யாவில் இவ் ஒலிம்பிக் விழாவை முன்னிட்டு மிக நவீன கால்பந்தாட்ட மைதானம், பாரிய விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம், ஓடுகளம் மற்றும் பல்வேறு கட்டிடங்கள் புதிதாக அமைக்கப்பட்டிருந்தன. விளையாட்டில் கலந்து கொள்வதற்காக 81 நாடுகளிலிருந்து 5200 பேர் வந்திருந்தனர். இவர்களால் இவ்விழாவில் 36 உலக சாதனைகளும், 73 ஒலிம்பிக் சாதனைகளும் இவ்வாண்டில் நிலைநிறுத்தப்பட்டன.

இங்கிலாந்து நாட்டவரான ஹெலன் வேல்ஸ் என்பவர் இவ்வாண்டு 100 மீ. ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றுக் கொண்டதுடன் ரஷ்யாவைச் சேர்ந்த லுப்பிளா

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்யா | 80 | 69 | 46 |
| கிழக்கு ஜேர்மனி | 47 | 37 | 42 |

## 1984 லொஸ் ஏஞ்சல்ஸ்


கார்ல் லூயிஸ்

1984ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக் விழாவிலேயே மிக அதிகமான நாடுகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. 140 நாடுகளைச் சேர்ந்த 7000 வீரர்கள் பங்குபற்றினர். 1980 மொஸ்கோ ஒலிம்பிக் விழாவில் அமெரிக்கா பங்குபற்றாமை காரணமாக இவ்விழாவை ரஷ்யா பகிஷ்கரித்தது. அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல் லூயிஸ் 100 மீ. ஓட்டப் போட்டியை 9.99 செகன்களில் ஓடித் தங்கப் பதக்கம் வென்றார். அவர் 200 மீ. ஓட்டப் போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றார். இவருடன் சேர்ந்து அமெரிக்கக் குழுவினர் 100 x 4 மீ. அஞ்சலோட்டப் போட்டியிலும் வெற்றிபெற்றனர். இறுதியாக கார்ல் லூயிஸ் நீளப் பாய்தலிலும் வென்று சாதனை படைத்தார். பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதில்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 83 | 61 | 31 |
| ருமேனியா | 20 | 16 | 17 |

## 1988 சியோல்


புபிகா

இவ்வாண்டில் தென் கொரியாவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகள் மிக அமைதியான முறையில் இடம்பெற்றதாகக் கருதப்பட்டது. 159 நாடுகளைச் சேர்ந்த 8600 பேர் இதில் கலந்து கொண்டனர். இவர்களால் தங்கப் பதக்கங்கள் 237 வெல்லப்பட்டன.

100 மீ. ஓட்டப் போட்டியில் கார்ல் லூயிஸை தோல்வியுறச் செய்து வெற்றிபெற்ற பென் ஜோன்சனின் சிறுநீரைப் பரீட்சித்த போது அவர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தினைப் பயன்படுத்தி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் தங்கப் பதக்கத்தை அவர் இழந்ததுடன் போட்டிகளிலிருந்தும் தடை செய்யப்பட்டார். இரண்டாம் இடத்தை வென்ற கார்ல் லூயிஸிற்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

ரஷ்யாவைச் சேர்ந்த சேர்பி புபிகா உயரப் பாய்தலில் 5.90 மீற்றர் பாய்ந்து உலக சாதனை ஏற்படுத்தித் தங்கப் பதக்கத்தை வென்றார். அமெரிக்காவைச் சேர்ந்த புளோரன்ஸ் கிரிபித்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்யா | 55 | 31 | 46 |
| கி.ஜேர்மனி | 37 | 35 | 30 |

## 1992 பார்சிலோனா


அலெக்ஸாண்டர்

ஸ்பெயின் நாடு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த 1921ஆம் ஆண்டிலிருந்தே அனுமதி கேட்டிருந்தபோதும் இவ்வாண்டே அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கு இவ்வாண்டில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியை அங்குராப்பணம் செய்வதற்காக கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ, நெல்சன் மண்டேலா மற்றும் பிரித்தானியாவின் ஆன் இளவரசி ஆகியோர் சமூகமளித்திருந்தனர். ஸ்பெயின் நாட்டின் அரசர் ஜுவான் கார்லோஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இவ்விழாவில் 170 நாடுகளைச் சேர்ந்த 9200 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். ரஷ்யாவில் அரசியல் மாற்றம் காரணமாக அந்நாட்டின் விளையாட்டு வீரர்கள் சுயேச்சைக் குழுவினராகவே கலந்து கொண்டனர். 30 ஆண்டுகளின் பின் தென்னாபிரிக்கா இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தின் குறுந்தூர ஓட்ட வீரர் லிங்க் பிரீவ் கிறிஸ்டி 100 மீ. ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றார். அமெரிக்காவைச் சேர்ந்த ஹேரல் டிவாஸ் பெண்களுக்கான 100 மீ. ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றார். 10 ஆண்டுகளாகத் தானே பதித்திருந்த உலக சாதனையை 30வது தடவையாக முறியடித்த ரஷ்ய வீராங்கனை சேர்பி புபிகா தனது சக

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்ய சுயேச்சைக் குழு | 45 | 38 | 29 |
| அமெரிக்கா | 37 | 34 | 37 |

## 1996 அட்லாண்டா


மைக்கல்

20ஆம் நூற்றாண்டின் இறுதி ஒலிம்பிக் விழா இதுவாகும். 197 நாடுகளில் இருந்து 10,300 போட்டியாளர்கள் பங்குபற்றியமை ஒரு சாதனையாகும். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். முன்னாள் குத்துச் சண்டை வீரர் முகமது அலி ஒலிம்பிக் தீபமேற்றினார். அமெரிக்க குறுந்தூர ஓட்ட வீரர் மைக்கல் ஜோன்சன் 200மீ, 400மீ போட்டிகளில் சாதனை படைத்தார். இவர் 200 மீ. போட்டியை 19.30 செக்கன்களில் பூர்த்தி செய்து புதிய சாதனையை நிலைநாட்டினார். பிரான்சின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை ஜோ ஜெரிக் 200மீ, 400மீ ஆகிய இரண்டு போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றார். இவர் 400 மீ. ஓட்டப் பந்தயத்தில் சாதனை நிலைநாட்டினார். ரஷ்ய வீரர் அலெக்ஷாண்டர்

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 44 | 32 | 25 |
| ரஷ்யா | 26 | 21 | 16 |

## 2000 சிட்னி


மேரியன்

உலகின் இதுவரை இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில், மிகப் பாரிய அளவில் அவுஸ்திரேலியாவின், சிட்னி ஒலிம்பிக் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 199 நாடுகளைச் சேர்ந்த 10, 600 போட்டியாளர்கள் பங்குபற்றினர். 300 போட்டிகள் இடம்பெற்றன. இவ்விழாவுக்கு அவுஸ்திரேலிய ஆதிவாசிகளான அபொரிஜினியர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். இதன் காரணமாக அபொரிஜினிய வீராங்கனையான கெத்தி பிமன்ட் ஒலிம்பிக் தீபமேற்ற அழைக்கப்பட்டார். அமெரிக்க வீராங்கனை மேரியன் ஜோன்ஸ் மிகச் சிறப்பான சாதனைகள் படைத்து 100மீ, 200 மீ, 400 x 4 மீ. ஓட்டப் பந்தயங்களில் தங்கப் பதக்கங்கள் வென்றார். மேலும் நீளம் பாய்தல், 100 x 4 மீ. போட்டிகளில் இவருக்கு வெண்கலப் பதக்கங்கள் கிடைத்தன. 17 வயதான அவுஸ்திரேலிய வீரர் இயன் தோர்ப் 400 மீ. நீச்சல் போட்டியில் புதிய சாதனை நிலைநாட்டியதுடன் 100 x 4 மீ., 200 x 4 மீ. போட்டிகளிலும் வென்று தங்கப் பதக்கங்கள் வென்றார்.

### பதக்க அட்டவணை

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 40 | 24 | 33 |
| ரஷ்யா | 32 | 28 | 28 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிம்பிக் சாதனைகள்

# ஆண் சாதனையாளர்கள்

| போட்டி | உலக சாதனை | நடைபெற்ற இடம் | போட்டி வீரர் | ஒலிம்பிக் ச |
|---|---|---|---|---|
| 100 மீற். | செக்கன் 9.78 | பரிஸ் (2002) | டிம்மொன்டி கொமரி (அமெரிக்கா) | செக். 9 |
| 200 மீற். | செக். 19.32 | அட்லாண்டா (1996) | மைக்கல் ஜோன்சன் (அமெரி) | செக் 19 |
| 400 மீற். | செக் 43.18 | செவிலா (1999) | மைக்கல் ஜோன்சன் (அமெரி) | செக் 43 |
| 800 மீற். | நிமிடம் 1:41:11 | கோல்ன் (1997) | வில்சன் கிப்கெடர் (நெதர்லாந்து) | நிமி 1:4 |
| 1500 மீற். | நிமி 3:26:00 | றோம் (1997) | இஷாம் எல் குரோஜ் (மொரோக்கோ) | நிமி 3:3 |
| 5000 மீற். | நிமி 12:37:35 | என்ஜலோ (2004) | கெனனிஸா பிகெலி (எத்தியோப்பியா) | நிமி. 13 |
| 10,000 மீற். | நிமி 26:20:31 | ஒஸ்ட்ராவா (2004) | கெனனிஸா பிகெலி (எத்தியோப்பியா) | நிமி. 27 |
| 3000 மீ. இடர் கடக்கும் ஓட்டம் | நிமி 7:55:28 | புரொக்செல்ஸ் (2001) | பிராஹிம் போலம் (மொரோக்கோ) | நிமி. 8: |
| 110 மீ. தடை தாண்டி ஓட்டம் | நிமி. 12:91 | ஸ்டுட்காட்ஸ் (1967) | கொலின் ஜெக்சன் (பிரிட்டன்) | செக். 1 |
| 400 தடை தாண்டி ஓட்டம் | நிமி. 46.78 | பார்ஸிலோனா (1992) | கெவின் யங்க் (அமெரிக்கா) | செக். 4 |
| கோல் ஊன்றிப் பாய்தல் | மீற்றர் 6.14 | செஸ்ட்ரியர் (1994) | சர்ஜ் குக்கா (உக்ரேன்) | மீற்.5.92 |
| | | | | மீற்.5.92 |
| தூரம் பாய்தல் | மீற்றர் 8.95 | டோக்கியோ (1991) | மைக் பவல் (அமெரிக்கா) | மீற். 8.9 |
| முப்பாய்ச்சல் | மீற்றர் 18.29 | கொடகோர்க்(1995) | ஜொனதன் எட்வர்ட் (பிரிட்டன்) | மீற்.18.0 |
| குண்டெறிதல் | மீற்றர் 23.12 | வெஸ்ட்வூட் (1990) | ரெண்டி பர்ன்ஸ் (அமெரிக்கா) | மீற்.22.4 |
| பரிதிவட்டம் வீசுதல் | மீற்றர் 74.08 | நியூ பிரென்டென்பர்க் (1986) | ஜர்கன் ஷுல்ட்ஸ் (ஜேர்மன்) | மீற்.69.4 |
| சம்மட்டி எறிதல் | மீற்றர் 86.74 | ஸ்டுட்காட் (1986) | யூரி செதிக் (ரஷ்யா) | மீற்.84.8 |
| ஈட்டி எறிதல் | மீற்றர் 98.48 | ஜேனா (1996) | ஜான் செலன்ஸி (செக்கோஸ்லாவிக்யா) | மீற். 90 |
| பத்து அம்சத்திறன் போட்டி | புள்ளி 9026 | கோட்ஸிஸ் (2001) | ரோமான் சேப்ரி (செக்கோஸ்லாவிக்யா) | புள்ளி 8 |
| 10 X 4 மீற்றர் | செக் 37.40 | பார்சிலோனா (1992) | அமெரிக்கா | செக் 37 |
| 400 X 4 மீற்றர் | நிமி 2:54:20 | யுனியொன்டோல் (1998) | அமெரிக்கா | நிமி. 2: |
| 20 கி.மீற்றர் நடத்தல் | மணி 1:17:21 | பரிஸ் (2003) | ஜெபர்ஸன் பெரஸ் (இக்வதோர்) | மணி 1: |
| 50 கி.மீற்றர் நடத்தல் | மணி 3:35:29 | செபொக்ஸெரி (2004) | ஜேனிஸ் நிஸ்ஹேகொ ரொதொவ் (ரஷ்யா) | மணி 3: |
| மரதன் | மணி 2:04:55 | போர்லின் (2003) | போன் டார்கட் (கென்யா) | மணி 2: |

*சர்வதேச மெய்வ*



புளோரன்ஸ் கிரிபித் ஜொய்னா

# பெ

| போட்டி | உலக சாதனை | நடைபெற்ற இடம் | வீராங்கனை |
|---|---|---|---|
| மீற்.100 | செக். 10.62 | சியோல் (1988) | ஃப்லோரன்ஸ |
| மீற்.200 | செக் 21.34 | சியோல் (1988) | ஃப்லோரன்ஸ |
| மீற்.400 | செக் 47.60 | கென்பரா (1985) | மாரிடா கொ |
| மீற்.800 | நிமி. 1:53:28 | மியுனிச் (1983) | ஜர்மிலா டெ |
| மீற்.1500 | நிமி. 3:50:46 | பீஜிங் (1993) | யுன்ஸியா க் |
| மீற்.5000 | நிமி. 14:24:68 | பெர்கன் (2004) | எல்வான் டெ |
| மீற்.10000 | நிமி. 29:31:78 | பீஜிங் (1993) | ஜுனியா [illegible] |
| மீற்.100 த.தா. ஓட்டம் | நிமி.12:21 | ஸ்ட்ரா செகோரா (1988) | யொர்தன்கா |
| மீற். 400 த.தா.ஓட்டம் | நிமி 52:34 | நேலா (2003) | யுலியா பெ |
| உயரம் பாய்தல் | மீற். 2.09 | றோம் (1987) | ஸ்டெஃப [illegible] |
| கோல். ஊன்றிப் பாய்தல் | மீற். 4.89 | பர்மின்ஹாம் (2004) | யெலெனா இ |
| தூரம் பாய்தல் | மீற். 7.52 | லெனின் கிராட் (1988) | கெலீனா (ர |
| முப்பாய்ச்சல் | மீற். 15.50 | கொடெபோர்க் (1995) | இனெஸ்ஸா |
| குண்டெறிதல் | மீற். 22.63 | மொஸ்கோ (1987) | நத்தாலியா |
| பரிதிவட்டம் வீசுதல் | மீற். 76.80 | நியுபிரன் டென்பர்க் (1988) | கேப்ரியேலா |
| சம்மட்டி எறிதல் | மீற். 76.07 | ரெட்லின்ஜன் (1999) | மிஷெலா மெ |
| ஈட்டி எறிதல் | மீற். 71.54 | ரேதினம்னோ (2001) | ஒஸ்லிதிஸ் |
| ஏழு அம்சத்திறன் போட்டி | புள்ளி. 7291 | சியோல் (1988) | ஜெக்கி ஜெ |
| மீற். 100 X 4 | செக். 41.37 | கன்பரா (1985) | ஜேர்மன் |
| மீற். 400 X 4 | நிமி. 3:15:17 | சியோல் (1988) | சோவியத் ஒ |
| 20 கி.மீற். நடத்தல் | மணி 1:26:22 | கன்ஸோக் (2001) | யென் வெங் |
| மரதன் | மணி 2:15:25 | லண்டன் (2003) | ஹேறலா ருட் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்

| ...க் சாதனை | போட்டியாளர் | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| சக். 9.84 | டொனோவன் பேலி (கனடா) | 1996 (அட்லாண்டா) |
| சக் 19.32 | மைக்கல் ஜோன்சன் (அமெரி) | 1996 (அட்லாண்டா) |
| சக் 43. 49 | மைக்கல் ஜோன்சன் (அமெரி) | 1996 (அட்லாண்டா) |
| மி 1:42:58 | வெபஜோன் ரொதால் (நோர்வே) | 1996 (அட்லாண்டா) |
| மி 3:32:07 | தோவா இன்கெனி (கென்யா) | 2000 சிட்னி |
| மி. 13:05:59 | சயித் அவோயிட்டா (மொரோக்கோ) | 1984 (லொஸ் என்ஜல்ஸ்) |
| மி. 27:07:32 | ஹேலி கெபஸெலாஸி (எத்தியோப்பியா) | 1996 (அட்லாண்டா) |
| மி. 8:05:51 | ஜூலியஸ் காரியுகி (கென்யா) | 1988 (சியோல்) |
| சக். 12:95 | எலன் ஜொன்சன் (அமெரிக்கா) | 1996 (அட்லாண்டா) |
| சக். 46.78 | கெவின் யங்க் (அமெரிக்கா) | 1992 (பார்ஸிலோனா) |
| ந்.5.92 | ஜீன் கெல்பினோ (பிரான்ஸ்) | 1996 (அட்லாண்டா) |
| ந்.5.92 | இகொர் டிரெண்ட் டென்கோவ் (ஜேர்மன்) | 1996 (அட்லாண்டா) |
| ந். 8.90 | பொப் பீமன் (அமெரிக்கா) | 1968 (மெக்ஸிக்கோ) |
| ந்.18.09 | கெனி ஹெரிசன் (அமெரிக்கா) | 1996 (அட்லாண்டா) |
| ந்.22.47 | உல்ப் டிமொர்மான் (ஜேர்மனி) | 1988 (சியோல்) |
| ந்.69.40 | லார்ஸ் ரீடல் (ஜேர்மனி) | 1996 (அட்லாண்டா) |
| ந்.84.80 | சர்ஜி லிட்வினோவ் (ரஷ்யா) | 1988 (சியோல்) |
| ந். 90.17 | ஜான் செலன் ஸி (செக்) | 2000 (சிட்னி) |
| ள்ளி 8847 | டேலி தொம்சன் (பிரிட்டன்) | 1984 (லொஸ் எஞ்சல்ஸ்) |
| க் 37.40 | அமெரிக்கா | 1992 (பார்சிலோனா) |
| மி. 2:55:74 | அமெரிக்கா | 1992 (பார்சிலோனா) |
| ணி 1:18:59 | ரொபர்ட் கொர்செனியோஸ்க்கி | 2000 (சிட்னி) |
| ணி 3:38: 29 | யெசெஸ்லாவ் இவ்னென்கோ | 1988 (சியோல்) |
| ணி 2:09:21 | கார்லோஸ் லோப்பஸ் | 1984 (லொஸ் எஞ்சல்ஸ்) |

*...யவல்லுநர் சங்கத்தின் இணையத் தளத்தில் பெறப்பட்ட விபரங்கள் இவை.*



**மைக்கல் ஜோன்ஸன்**

# ...பெண் சாதனையாளர்கள்

| ...னை | ஒலிம்பிக் சாதனை | வீராங்கனை | நடைபெற்ற இடம் |
|---|---|---|---|
| ...ரன்ஸ் ஜொயினர் (அமெரிக்கா) | செக் 10.62 | ஃப்லோரன்ஸ் ஜொயினர் (அமெரிக்கா) | 1988 (சியோல்) |
| ...ரன்ஸ் ஜொயினர் (அமெரிக்கா) | செக் 19.32 | ஃப்லோரன்ஸ் ஜொயினர் (அமெரிக்கா) | 1988 (சியோல்) |
| ... கொச் (ஜேர்மனி) | செக் 48.25 | மாரிஜோபெரக் (பிரான்ஸ்) | 1996 (எட்லாண்டா) |
| ...ா டெக்விலோவா (ஜேர்மனி) | நிமி. 1.53:43 | நடேஷா ஒலிஸ ரென்கோ (நோர்வே) | 1980 (மொஸ்கோ) |
| ...பா க்யூ (சீனா) | நிமி. 3:53:96 | போலா இவான் (ருமேனியா) | 1988 (சியோல்) |
| ...ன் பெயிலகஸ் (துருக்கி) | நிமி. 14:40:79 | கெரிலா சாபோ (ருமேனியா) | 2000 (சிட்னி) |
| ... வன்க் (சீனா) | நிமி 30:17:49 | டெரார்டு டுலு (எத்தியோப்பியா) | 2000 (சிட்னி) |
| ...ன்கா டொன்கோவா (பல்கேரியா) | செக். 12.38 | யொர்தன்கா (பல்கேரியா) | 1988 (சியோல்) |
| ... பெவன் கினா (ரஷ்யா) | செக். 52.82 | டியோன் ஹெமிங்க்ஸ் (ஜெமேக்கா) | 1996 (எட்லாண்டா) |
| ...ா (பல்கேரியா) | மீற். 2.05 | ஸ்டெப்கா (பல்கேரியா) | 1996 எட்லாண்டா) |
| ...னா இஸின் பாயெவா (ரஷ்யா) | மீற். 4.60 | ஸ்டெஸி டெகிலா (அமெரிக்கா) | 2000 (சிட்னி) |
| ... (ரஷ்யா) | மீற். 7.40 | ஜெக்கி ஜொயினர் (அமெரிக்கா) | 1988 (சியோல்) |
| ...ஸா கிராவெட்ஸ் (உக்ரேய்ன்) | மீற். 15.33 | இனெஸ்கா (உக்ரேய்ன்) | 1996 (எட்லாண்டா) |
| ...யா லிச்சொஸ்காயா (ரஷ்யா) | மீற். 22.41 | இலோனா (ஜேர்மன்) | 1980 (மொஸ்கோ) |
| ...பலா (ஜேர்மன்) | மீற். 72.30 | மட்டினா ஹெல்மன் (ஜேர்மன்) | 1988 (சியோல்) |
| ...ா மெலின்டே (ருமேனியா) | மீற். 71.16 | கெமிலா ஸ்கொலிமொர்சஸ்கா (போலந்து) | 2000 (சிட்னி) |
| ...ஸ் மெனன்தஸ் (கியூபா) | மீற். 68.91 | டிரயின் மெட்டெஸ்ட் | 2000 (சிட்னி) |
| ... ஜொயினர் (அமெரிக்கா) | புள்ளி 7291 | ஜெக்கி ஜொயினர் (ஐ.அ) | 1988 (சியோல்) |
| | செக் 41.60 | ஜேர்மன் | 1980 (மொஸ்கோ) |
| ...த் ஒன்றியம் | நிமி 3:15:17 | சோவியத் ஒன்றியம் | 1988 (சியோல்) |
| ...வங்க் (சீனா) | மணி 1:29:05 | லிப்பின்வெண்க் (சீனா) | 2000 (சிட்னி) |
| ... ருட்க்லிஃப் (பிரிட்டன்) | மணி 2:23:14 | நயோகோ டக்கஹாஷி (ஜப்பான்) | 2000 (சிட்னி) |

ஒலிம்பிக் சாதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏளனச் சிரிப்புப் பலத்த கரகோஷமாக மாறியது



டங்கன்

இலங்கை முதல் முதலாக ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றியது 1948இல் லண்டனில் நடைபெற்ற போட்டியிலாகும். அப்போட்டியில் பங்குபற்றிய எட்டு வீரர்களைக் கொண்ட இலங்கை அணிக்கு தலைமை தாங்கியவர், 400 மீற்றர் தடைதாண்டி ஓடும் நிகழ்ச்சியில் பங்குகொண்ட, இலங்கையின் அப்போதைய சிறந்த மெய்வல்லுந வீரரான டங்கன் வைட் ஆவார்.

ஜோன் டி சேரம் (100 மீ, 200மீ மற்றும் 400 மீ ஓட்டப் பந்தயங்கள்) அல்பர்ட் பெரோ (குத்துச்சண்டை) டீ.சீ.பீரிஸ் (முப்பாய்ச்சல்) எட்வர்ட் கிரே (குத்துச்சண்டை) அலெக்ஸ் ஒபேசேகர (குத்துச்சண்டை) வெஸ்லி ஹந்துன்கே (குத்துச்சண்டை) மற்றும் எச்.பி. ஜயசூரிய (குத்துச்சண்டை) ஆகிய வீரர்களே இலங்கைக்காக முதல்முறையாக ஒலிம்பிக்கில் பங்குபற்றிய ஏனைய வீரர்களாவர். இப்போட்டியில் 400 மீற்றர் தடை தாண்டி ஓடுவதில் டங்கன் வைட் வெள்ளிப் பதக்கத்தை வென்றதன் மூலம் இலங்கையின் முதலாவது ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

அதனையடுத்து நடைபெற்ற ஹெல்சிங்கி (8பேர்) மெல்பர்ன் (4 பேர்) ரோம் (6 பேர்) மற்றும் மியூனிச் போட்டிகளில் 5 பேர் என்ற ரீதியில் இலங்கை வீரர்கள் பங்குபற்றினர். எனினும் எந்தவொரு இலங்கை வீரரும் இப்போட்டிகளில் பதக்கங்கள் எதனையும் வெற்றிகொள்ள முடியவில்லை.


எனினும் 1964இல் டோக்கியோவில் நடைபெற்ற போட்டியில், 10,000 மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்றிய இலங்கைவீரர் ஆர்.ஜே.ஜே. கருணானந்த, தோல்வி தெளிவாகத் தெரிந்த நிலையிலும், பந்தயத்தின் முழுத் தூரத்தையும் ஓடி முடித்ததன் மூலம் காட்டிய தைரியமனப்பான்மைக்கு மிகுந்த கௌரவம் கிடைத்தது.

10,000 மீற்றர் ஓட்டப் பந்தயத்தின் இறுதிச் சுற்றுக்கள் மூன்றையும் தனியாகவே ஓடிமுடித்த கருணாநந்தவுக்கு அரங்கில் திரண்டிருந்த விளையாட்டு ரசிகர்கள் முதலில் ஏளனம் செய்த போதும், அந்த ஏளனங்களுக்கிடையில் கருணாநந்த மூன்று சுற்றுக்களையும் தனித்து ஓடிப் போட்டியின் முழுத் தூரத்தையும் முடித்துக் கொண்ட தைரிய மனப்பான்மைக்குத் தமது ஆசனங்களில் இருந்து எழுந்து பலத்த கரகோஷம் எழுப்பி அவருக்குக் கௌரவம் வழங்கினர்.

விளையாட்டின் நோக்கம் வெற்றிபெறுவதல்ல அதில் பங்குபற்றுவதேயாகும் என்பதற்கு நல்ல உதாரணமாக விளங்கிய கருணாநந்தவின் இந்தச் செயற்பாடு உலகளாவிய ரீதியில் ஊடகங்களின் மூலம் பிரபல்யம் பெற்றது மட்டுமன்றிப் பிற்காலத்தில் ஜப்பானிய பாடசாலைப் புத்தகங்களிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1976இல் கனடாவின் மொன்ட்ரியல் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கை எந்தவொரு வீரரையும் அனுப்பவில்லை. எனினும் அதனையடுத்து இடம்பெற்ற மொஸ்கோ போட்டிக்கு 7 பேரும், லொஸ் ஏஞ்சல்ஸ் போட்டிக்கு 6 பேரும் சியோல் போட்டிக்கு 11 பேரும், பார்சிலோனா போட்டிக்கு 14 பேரும், அட்லான்டா போட்டிக்கு 15 பேரும் இலங்கையின் சார்பாகப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். எனினும் வெற்றிவாய்ப்புக்கள் எதுவும் கிட்டவில்லை.

அட்லன்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இலங்கையின் சார்பாக பங்குபற்றிய சுசந்திகா ஜயசிங்ஹ, இரண்டாவது சுற்றுக்குத் தெரிவானார். எனினும் இரண்டாவது சுற்றின் போது அவரது காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஓட்டப் பாதையில் விழுந்ததை அடுத்து இலங்கையின் எதிர்பார்ப்புக்கள் பிசுபிசுத்துப் போயின.



டங்கன்

இலங்கையின் சார்பாக அதிக அளவில் வீர, வீராங்கனைகள் பங்குபற்றிய ஒலிம்பிக் போட்டி 2000மாம் ஆண்டில் சிட்னியில் நடைபெற்ற போட்டியாகும். அப் போட்டியில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓடடப் பந்தயத்தில் இலங்கையின் சுசந்திகா ஜயசிங்ஹ வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இது இலங்கைக்கு மட்டுமன்றித் தெற்காசியாவுக்கே கீர்த்தியைப் பெற்றுத் தந்தது. ஏனெனில் சிட்னி ஒலிம்பிக் போட்டியில் மெய்வல்லுநர் போட்டிகளைப் பொறுத்தவரை முழுத் தெற்காசியாவுக்கும் கிடைத்த ஒரே பதக்கம் இதுவாகும்.

**இலங்கைக்கு முதலாவது பதக்கத்தைப் பெற்றுத் தந்த டங்கன் வைட்**

85,000 பார்வையாளர்களுக்கு மத்தியில் ஒலிம்பிக் போட்டியின் போது இலங்கைக் கொடி முதல் முறையாக உயர்த்தப் படும் கௌரவத்தைப் பெற்றுத்தந்த டங்கன் வைட், ஒலிம்பிக் பதக்கமொன்றை வென்ற முதல் இலங்கை வீரர் என்ற பெருமையையும் பெறுகிறார்.

தேசிய விளையாட்டுத் துறையைப் பற்றிப் பேசும் போது டங்கன் வைட் ஞாபகத்துக்கு வராவிடில் அது புதுமையாகும். 1948 இல் லண்டன் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது ஆண் களுக்கான 400 மீற்றர் தடைதாண்டி ஓடும் பந்தயத்தில் டங்கன் வைட் வெள்ளிப் பதக்கம் வென்றதை அடுத்து இலங்கைக்கு திரும்பிய போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது. இந்த வரவேற்பு அவரது வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி என்று டங்கன் வைட் பின்னர் குறிப்பிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்வியினால் உலகை வெற்றிகொண்ட கருணானந்த

வெற்றியையே முக்கியமாகக் கொள்ளாது விளையாட்டில் பங்குபற்றுதலே விளையாட்டின் மகத்துவம் என்பதை உலகுக்கு உணர்த்திய நீண்டதூர ஓட்ட வீரர் ஆர்.ஜே.கே. கருணானந்த, வெற்றிபெறுவதனால் கிடைக்கும் கௌரவத்தைவிடத் தோல்வியின் மூலம் அதிக பெருமையை ஈட்டிக்கொண்டவர் ஆவர்.

விளையாட்டு ரசிகர்களால் ரணதுங்க கருணானந்த என்று அழைக்கப்பட்ட இவர் 1962ஆம் ஆண்டுப் பகுதியில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் நாட்டின் முதன்மை வீரராகத் திகழ்ந்தார்.

இராணுவத்தில் சேவையாற்றிய கருணானந்த 1962இல் நடைபெற்ற தேசிய மெய்வல்லுநர் போட்டிகளின் போது, ஆண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டத்தில் புதிய சாதனையொன்றை நிலைநாட்டியது மட்டுமன்றி, அச்சாதனையின் மூலம், அதுவரை இந்திய வீரரொருவரின் பெயரில் இருந்த தேசிய சாதனையை, இலங்கை வீரர் ஒருவரின் பெயருக்கு மாற்ற முடிந்த கௌரவத்தையும் ஈட்டிக் கொண்டார்.

இந்தச் சாதனையின் மூலம் 1964இல் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

அப்போட்டியில் அவருக்கு 29ஆவது இடமே கிடைத்தது. அந்த இடத்தை அவர் பெறுவதற்காக 5000 மீற்றர் தூரத்தை ஓடிமுடித்தபோது அவர் மூன்று சுற்றுக்கள் தனித்தே ஓடவேண்டியிருந்தது. ஏனெனில் அவருடன் போட்டியிட்ட வீரர்கள் அனைவரும் 5000 மீற்றர் தூரத்தை ஓடி முடித்திருந்ததுடன் மைதானத்தை விட்டே சென்றிருந்தனர். தனியொருவராக மூன்று சுற்றுக்களையும் ஓடிமுடித்து நிகழ்ச்சியை முடித்துக் கொண்டபோது அரங்கத்தில் நிறைந்திருந்த பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் செய்து கருணானந்தவை கௌரவப்படுத்தினர்.

இலங்கையின் முதலாவது விளையாட்டு அமைச்சரான வி.ஏ.சுகததாஸ இதுபற்றிக் கூறும்போது ஆயிரக் கணக்கான டாலர்களைச் செலவிட்டும் பெறமுடியாத கௌரவத்தை இந்த வீரர் இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறார்.

1968ஆம் ஆண்டு வரை 5000 மற்றும் 10,000 மீற்றர் ஓட்டத்தில் திறமை காட்டி வந்த கருணானந்த அவரது 38ஆவது வயதில் மெய்வல்லுநத் துறையில் இருந்து மட்டுமன்றி அவரது பூவுலக வாழ்க்கையையும் முடித்துக்கொண்டார். அதாவது 1974ஆம் ஆண்டு அம்பாறையில் இடம்பெற்ற திடீர் விபத்தொன்றில் அவர் கொல்லப்பட்டார்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறுந்தூர ஓட்டப் பந்தயங்கள் பலவற்றில் திறமை காட்டியதன் காரணமாகவே லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணிக்கு டங்கன் வைட் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஒரு சுவாரஸ்யமான சம்பவம் என்னவெனில், தெரிவுக் குழுவின் நிர்ப்பந்தமான வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தே டங்கன் வைட் 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் பங்குபற்றினார். குறிப்பிட்ட ஓட்டப் பந்தயத்தில் பங்குபற்றாவிட்டால் லண்டன் பயணத்தில் டங்கன் வைட் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என்று தெரிவுக் குழுவினர் கூறியிருந்ததாகவும் லண்டன் நகரை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகவே தெரிவுக் குழுவின் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவித்ததாகவும் டங்கன் வைட் பிற்காலத்தில் கூறியிருந்தார்.

டங்கன் வைட்டின் ஏனைய பெருமைகளில் 1950இல் ஓக்லண்ட் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டி ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

அச்சமயம் இலங்கை காலாற் படையில் சேவையாற்றிய டங்கன் வைட், ஒலிம்பிக் பதக்கமொன்றை வென்றபோது அவருக்கு வயது 29. பிற்காலத்தில் இங்கிலாந்தில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட டங்கன் வைட் பலமுறை இலங்கைக்கு வந்து போனார். 1990இல் லண்டனில் அவர் மரணமுற்றார்.

## இலங்கைக்கு முதல் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த இலங்கையின் முதல் பெண் வீராங்கனை



இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்ஹ இலங்கையின் பெண்கள் மெய்வல்லுநர் சரித்திரத்தை மாற்றி எழுதியவர் ஆவார். உலக சாம்பியன்ஷிப் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வென்ற ஒரேயொரு இலங்கை வீராங்கனை என்ற கௌரவத்தை அவர் பெற்றுள்ளார். 1948இல் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை வீரர் டங்கன் வைட் பதக்கமொன்றை வென்றதை அடுத்து 50 வருடங்களின் பின்னர் 2000மாம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் சுசந்திகா வெண்கலப் பதக்கமொன்றை வென்றமை இலங்கை மட்டுமன்றி முழு ஆசியாவினதும் கவனத்தை ஈர்த்தது. அதற்கு முன்னர் 1997இல் கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இலங்கையின் மெய்வல்லுநர் துறையில் பலர் சுசந்திகாவின் நெருங்கிய நண்ப, நண்பியர் ஆவர். சர்வதேச ரீதியில் ஒரு சமயம் பிரபல்யம் பெற்றிருந்த தம்மிக நந்தகுமார என்ற மெய்வல்லுந வீரரையே சுசந்திகா திருமணம் செய்துகொண்டுள்ளார்.

எட்னாவல மகா வித்தியாலயம் மற்றும் உடுவக்க கனிஷ்ட பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவியான சுசந்திகாவின் பிறந்த ஊர், வரகாபொலையில் உள்ள உடுவக்க என்ற கிராமமாகும்.

### ஒலிம்பிக் பளு தூக்குதல்

பளு தூக்கும் போட்டி இரு பிரிவுகளில் இடம்பெறும். Snatch மற்றும் Clean And Jerk என்பன இந்த இரு பிரிவுகளாகும். **Snatch** பிரிவில் ஒரேயடியாகப் பளுவைத் தலைக்கு மேலாகத் தூக்க வேண்டும். Clean And Jerk பிரிவில் முதலில் நெஞ்சுவரை பளுவை உயர்த்திப் பிடித்துப் பின்னர் அதனைத் தலைக்கு மேல் தூக்க வேண்டும். பளுவை ஒவ்வொரு முறை தூக்கும் போதும் 2.5 கிலோ மேலதிகமாகச் சேர்க்கப்படும். ஒவ்வொரு நிறை அளவிலும் பளுவைத் தூக்க வீரர் ஒருவருக்கு மூன்று வாய்ப்புகள் வழங்கப்படும்.

உபகரணங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரப் பின்னணி



இற்றைக்கு 108 வருடங்களுக்கு முன் கிரேக்கத்தின் தலைநகரான எதென்ஸ் நகரில் நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின. தனவந்தர் ஒருவரின் தியாகத்தின் மூலம் ஆரம்பமாகிய ஒலிம்பிக் போட்டிகளுக்கு நினைவு முத்திரை விற்பனை மூலம் கிடைத்த வருமானமும் சேர்ந்து கொண்டது.


நான்கு வருடங்களின் பின் ஒலிம்பிக் போட்டிகள் அதன் ஆரம்பகர்த்தாவான பெரோன் பியரே டீ குபர்டீனின் சொந்த நாடான பிரான்சுக்குச் சென்றது. எனினும் போட்டி நிகழ்ச்சிகளை ஐந்து மாத காலத்துக்கு நடத்துவதென்ற தீர்மானம் காரணமாக அம்முறை போட்டிகள் வெற்றியளிக்கவில்லை. போட்டிகளில் பங்குபற்றிய வீரர்கள் தாங்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றினர் என்பதைக் கூட தெரிந்திருக்காத அளவுக்கு அம்முறை போட்டிகள் தோல்வியில் முடிந்திருந்தன.

அமெரிக்காவின் இரண்டு நகரங்களான சிக்காகோ மற்றும் செயின்ட் லூவி ஆகியவற்றின் அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாகவும் அமெரிக்க ஜனாதிபதி தியடோர் ரூஸ்வெல்ட்டின் ஆதரவு செயின்ட் லூவி அதிகாரிகளுக்குக் கிடைத்தன் காரணமாகவும் இரண்டாவது ஒலிம்பிக் போட்டிகள் செயின்ட் லூவி நகரில் இடம்பெற்றன.

பெருமளவிலான ஐரோப்பிய நாடுகள் இப்போட்டிகளைப் பகிஷ்கரித்ததுடன் ஒலிம்பிக் ஆரம்பகர்த்தா குபர்டீனுக்குக் கூட இதில் பங்குபற்றும் ஆர்வம் இருக்கவில்லை.

ஒலிம்பிக் போட்டி நடைபெறும் போது சர்வதேச ரீதியில் அனைத்து யுத்தங்களையும் நிறுத்திவிட்டு யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தவது புராதன ஒலிம்பிக் வழக்கமாக இருந்தது. எனினும் 1916இல் இந்த வழக்கம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இறுதியாக ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டி ரத்தாகியது.

1920இல் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு பெல்ஜியத்துக்கு கிடைத்தது. முதலாவது உலக யுத்தத்தின்போது பெல்ஜிய மக்கள் பட்ட வேதனைகளின் காரணமாகவே இந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருந்தது. எனினும் அம்முறை உலக யுத்தத்தில் குதித்திருந்த ஜேர்மனி, அவுஸ்திரியா, பல்கேரியா, ஹங்கேரி, துருக்கி ஆகிய நாடுகள் அம்முறை போட்டியில் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.



ஸ்டொக்ஹோம்

1924இல் ஒலிம்பிக் போட்டி பாரிஸில் நடைபெற்றது. போட்டி ஏற்பாடுகள் கிரமமாகச் செய்யப்பட்டிருந்த போதிலும் பிரெஞ்சு மக்கள் போட்டிகளுக்குப் போதுமான ஒத்துழைப்பைத் தரவில்லை.

1928இல் நெதர்லாந்தின் அம்ஸ்டடாம் நகரில் இடம்பெற்ற போட்டிகளின் போது ஜேர்மனி 16 வருடங்களின் பின் ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றியதும், மெய் வல்லுநர் போட்டிகளில் முதன்முறையாக பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

அடுத்த ஒலிம்பிக் போட்டியை ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்ட போதும் அப்போது ஜேர்மனியை நிர்வகித்து வந்த அடோல்ப் ஹிட்லரின் யுத்தமயச் செயற்பாடுகள் காரணமாகப் பல நாடுகள் போட்டியைப் பகிஷ்கரிக்க ஆயத்தமாகின.

இந்நிலையில் மக்கள் ஒலிம்பிக் விழா என்ற பெயரில் மற்றொரு விளையாட்டு விழாவை நடத்த ஸ்பெயின் தயாராகியது. எனினும் அந்த விழா ஆரம்பமாவதற்கு முதல் நாளன்று ஸ்பெயினில் உள்நாட்டு யுத்தமொன்று ஆரம்பித்ததன் காரணமாக மக்கள் ஒலிம்பிக் விழா ரத்துச் செய்யப்பட்டது.

1948இல் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு லண்டன் முன் வந்தது. அதனை ஒரு சவாலாக ஏற்ற லண்டன் இந்தத் தீர்மானத்திற்கு வந்திருந்தது. அத்துடன் இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற முதலாவது ஒலிம்பிக் போட்டியாகவும் இது அமைந்தது. இப்போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்ட போதும் ஜேர்மனிக்கும் ஜப்பானுக்கும் இப்போட்டியில் பங்குபற்ற அழைப்பு அனுப்பப்படவில்லை.

1956இல் ஒலிம்பிக் போட்டி அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்றது. இதன் மூலம் உலகின் தென் அரைக் கோளப் பகுதிக்கு ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு முதல் முறையாகக் கிடைத்தது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் எப்போதுமே அரசியல் பிரச்சினைகளில் சிக்கித் தவித்த நிலையில் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் வெகு தொலைவில் உள்ள மெல்பர்னில் போட்டிகள் நடைபெற்ற போதும் பிரச்சினைகள் குறைந்திருந்ததாகக் கூறமுடியாது.

1960இல் இத்தாலியின் தலைநகரான ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தென் ஆபிரிக்கா பங்குபற்றியது. எனினும் இன ஒதுக்கல் காரணமாக தென் ஆபிரிக்கா 32 வருடகாலம் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றமுடியாமல் தடை விதிக்கப் பட்டது.

1964இல் ஒலிம்பிக் போட்டிகள் முதல் முறையாக ஆசியாவுக்கு வந்தன. ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற இப்போட்டி அலங்காரம் மிக்கதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் வடகொரியாவும் இந்தோனேசியாவும் இப்போட்டியில் பங்கேற்கவில்லை.


1968இல் ஒலிம்பிக் போட்டி மெக்ஸிக்கோவில் நடைபெற்றது. போட்டிகள் ஆரம்பமாவதற்குப் பத்து நாட்களுக்கு முன் மெக்ஸிக்கோ அரச படையினர், இளைஞர்களின் ஊர்வலமொன்றின் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

1972இல் ஜேர்மனியின் மியூனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது வீரர்கள் தங்கியிருந்த விடுதிகளுக்குள் ஊடுருவிய பலஸ்தீனத் தீவிர வாதிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இஸ்ரேலிய வீரர்கள் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன், பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட மேலும் ஒன்பது இஸ்ரேலிய வீரர்களைத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்ற சம்பவம் முழு உலகத்தினதும் கண்டனத்துக்கு உள்ளானது.

1980இல் ரஷ்யாவின் தலை நகரான மொஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை அரசியல் காரணங்களுக்காக அமெரிக்கா பகிஷ்கரித்தது. இதனால் மெய்வல்லுநர் போட்டிகள், நீச்சல், படகு வலித்தல் மற்றும் ஹொக்கி ஆகிய விளையாட்டுக்களின் தரம் குறைந்ததை அவதானிக்க முடிந்தது. இதற்கு பழிக்குப் பழி வாங்கும் நோக்கில் 1984இல் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிப்பதென ரஷ்யா தீர்மானித்தது.

1988இல் ஒலிம்பிக் போட்டிகளைத் தென் கொரியாவின் சியோல் நகரில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்ட போதும், போட்டியைத் தென் கொரியாவினால் வெற்றிகரமாக நடத்த முடியுமா? என்ற கேள்வி பலருக்கு எழுந்தது. எனினும் சர்வதேச அழுத்தங்களுக்கு மதிப்பளித்த தென் கொரியா போட்டியை நடத்து முன்னர் ஜனநாயக ரீதியிலான தேர்தலொன்றை நடத்தியதன் மூலம் நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுத்தது.

1988ஐ அடுத்த நான்கு ஆண்டு காலப் பகுதியில் உலகில் பல பாரிய மாற்றங்கள் இடம்பெற்றன. தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் ஒழிக்கப்பட்டதுடன் பேர்லின் சுவர் இடிக்கப்பட்டுக் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இரண்டு நாடுகள் அல்ல, ஒரே நாடு என்றாகின. அதே வேளை, சோவியத் ரஷ்யா 15 சுதந்திர நாடுகளாகப் பிளவுண்டது.



1992இல் ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி, ஒலிம்பிக் சரித்திரத்தில் பழைய பகைமைத்துவங்கள் கைவிடப்பட்ட அலங்காரம் மிக்க விளையாட்டு விழாவாக அமைந்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் தடையுத்தரவுக்குட்பட்ட குரோஷியா மட்டுமே இப்போட்டியில் பங்குபற்றாத நாடாகும்.

இதனை அடுத்து இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் அரசியல் பகைமைகளைக் குறைந்த அளவிலேயே காணமுடிந்ததுடன் 2000மாம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலேயே மிகவும் சிறப்பாக நடைபெற்ற போட்டியாகச் சாதனைப் புத்தகங்களில் இடம்பிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் வரலாற்றில் ஆழக்கால் பதித்தோர்...

## எமில் செட்டோபெக்

உலகில் தோன்றிய நீண் தூர ஓட்டப் பந்தய வீரர்களில் முன்னணியில் வைத்துப் போற்றப்படுபவர் செக்கோஸ்லாவியாவைச் சேர்ந்த எமில் செட்டோபெக் ஆவர். 1952ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் 5000 மீ, 10,000 மீ, ஓட்டப் போட்டிகளை மிகக் குறைந்த நேரத்தில் ஓடிமுடித்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இவர், 10,000 மீ. தூரத்தை 29 விநாடிகளில் ஓடிமுடித்தமை பலரது வாயைப் பிளக்கச் செய்தது.

1948 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 10,000 மீ. ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற எமில், 5000 மீ, போட்டியிலும் தங்கப் பதக்கத்தை வென்றமை
குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் ஹெல்சிங்கியில் நடைபெற்ற 1952ஆம் ஆண்டு ஒலிம்பிக் விழா போட்டிகளில் 10,000மீ, 5,000மீ மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளில் இவர் வெளிப்படுத்திய அபாரத் திறமைகள் இவருக்கு ஒலிம்பிக் வரலாற்றில் மெய்வல்லுநர் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றுக் கொடுத்தன. மேற்படி மூன்று போட்டிகளில் மரதன் ஓட்டப் போட்டி தொடர்பில் இவருக்கு முன் அனுபவம் இருக்கவில்லை என்பது விசேட அம்சமாகும்.

பின்னர் இவரது சாதனைகளின் நிமித்தம் இவருக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பியரே டி கூபர்டின் ஞாபகார்த்த விருது 1975ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இவர் தனது 78வது வயதில் அண்மையில் காலமானார்.

## ஹபிப் பெர்க்கேலா



உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றான ஆபிரிக்கக் கண்டத்தின் எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்தவரான ஹபீப் பெக்கேலா தனிநபருக்கு மாத்திரமன்றி முழு ஆபிரிக்காக் கண்டத்துக்கும் பெருமை சேர்த்துக் கொடுத்தார். எனினும் 1968ஆம் ஆண்டு அரச துரோகக் குற்றத்தில் ஈடுபட்டார் என்ற குற்றத்துக்காக இவரைச் சிறையில் அடைத்ததால் தொடர்ந்து அதன் பின்வந்த ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம்பெறும் சந்தர்ப்பங்களை இழந்தார். சிறையில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் மீண்டும் 1968ஆம் ஆண்டு மெக்ஸிக்கோ ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்ட போதும் அவரால் 17 கி.மீ. தூரத்தை மட்டுமே ஓடமுடிந்தது. ஓடு பாதையில் மயங்கி வீழ்ந்த இவர் அதன் பின்னர் தன் வாழ்நாளைச் சக்கர நாற்காலியிலேயே கழிக்க நேர்ந்தது. இவர் 1973ஆம் ஆண்டு தனது 41வது வயதில் உயிர் நீத்தார்.

## புளோரன்ஸ் கிரிபித் ஜொய்னர்



16 வருடங்களுக்கு முன்னர் 1988ஆம் ஆண்டு தென் கொரிய நகரமான சியோல் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீ. 200 மீ பெண்கள் ஓட்டப் போட்டிகளில் அமெரிக்காவைச் சேர்ந்த புளோரன்ஸ் கிரிபித் ஜொய்னர் நிலை நிறுத்திய உலக சாதனைகள் இன்னமும் முறியடிக்கப்பட வில்லை. 1988ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க ஒலிம்பிக் தேர்வுப் போட்டியில், 100 மீ. ஓட்டப் போட்டியை 10.49 செக்கன்களில் ஓடிமுடித்த இவர் இதற்கு முன் நிலைநாட்டப்பட்டிருந்த எவ்லின் எஸ்போர்டின் சாதனையை முறியடித்தார். இதே ஆண்டு இவர் மேலும் 100 x 4 மீ. அஞ்சலோட்டப் போட்டியிலும் வென்று மொத்தம் 3 தங்கப் பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்ததுடன் 400 x 4 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமொன்றையும் வென்றார். எனினும் 10 வருடங்களுக்குப் பின்னர் 1998ஆம் ஆண்டு இவருக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக நித்திரையிலேயே இவர் உயிர் பிரிந்து போய்விட்டமை துரதிர்ஷ்டமாகும்.

## மார்க் ஸ்பிட்ஸ்



ஒரே ஒலிம்பிக் போட்டியில் ஒரேதரத்தில் 7 தங்கப் பதக்கங்கள் வென்று பெருமை சேர்த்த உலகின் ஒரேயொரு நீச்சல் வீரர் அமெரிக்காவைச் சேர்ந்த மார்க் ஸ்பிட்ஸ் ஆகும். இவரது சாதனை 1972ஆம் ஆண்டு ஜேர்மனியின் மியூனிச் நகரில் நிகழ்த்தப்பட்ட போதும் அன்று ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற 11 இஸ்ரேலிய வீரர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட சோக சம்பவத்தால் இவரது சாதனை சோபை இழந்தது. இதனால் இவர் மிக இரகசியமாகவே அமெரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தது.

இவரைவிடப் பல போட்டிகளிலும் பங்குபற்றி 9 தங்கப் பதக்கம் வென்றவர்களான கார்ள் லுயிஸ், பார்வோ நூர்மி, லரிசா லெட்னியா ஆகியோருக்குச் சமமாக மதிக்கப்படும் இவர் 10 தங்கப் பதக்கம் வென்றவரான ரே எவ்ரி என்பவருக்கு இரண்டாம் இடத்தில் உள்ளார்.

1950, பெப்ரவரி 10ஆம் திகதி பிறந்தவரான இவர் சிறு வயது முதலே தொடர்ச்சியாகப் பல மட்டங்களிலும் பல்வேறு சாதனைகளைச் செய்துகொண்டே இருந்தார். தனது 10 வயதில் இத்தகைய 17 சாதனைகளை ஏற்படுத்தியிருந்தார்.

## பார்வோ நூர்மி



1897 ஜூன் 13ஆம் திகதி பிறந்த பார்வோ நூர்மி ஒலிம்பிக் போட்டிகளில் 9 தங்கப் பதக்கங்களைக் குவித்த வீரர் எனப் போற்றப்படுபவராவார். இதற்கு மேலதிகமாக மேலும் 3 வெள்ளிப் பதக்கங்களையும் இவர் தன் நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தார்.

1920ஆம் ஆண்டு 3 தங்கப் பதக்கங்களும், ஒரு வெள்ளிப் பதக்கமும், 1924ஆம் ஆண்டு ஒரு தங்கப் பதக்கமும், 2 வெள்ளிப் பதக்கங்களும் வென்றார். இராணுவப் படை வீரரான இவர் தனக்கு அதில் பெற்ற அனுபவங்கள் பேருதவியாக இருந்ததாகக் கூறினார்.

1500 மீ, 5,000 மீ, 3,000 மீ. ஆகிய ஓட்டப் போட்டிகளில் இவர் மிகுந்த திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். இவற்றில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ள இவர் 1928ம் ஆண்டு 10,000மீ ஓட்டப் போட்டியிலும் தங்கப் பதக்கம் பெற்றார். இவர் 1973 ஒக்டோபர் 2ஆம் திகதி இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்.

உலகின் மிகச் சிறந்த ஓட்ட வீரராக இப்போதும் திகழ்பவர் 'எமில் செட்டோபெக்' தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொபி பீமன்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தைச் சேர்ந்த பொபி பீமன் தனது 22வது வயதில் 1968ஆம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டியில் தூரப் பாய்தல் போட்டியில் உலக சாதனை படைத்தார். இப்போட்டியில் இவர் 29 அடி 2.5 அங்குலங்கள் பாய்ந்து இச்சாதனையைச் செய்தார். இவரது இந்தச் சாதனை சுமார் 23 வருடங்களாக முறியடிக்கப்படாமல் இருந்தது. 1991 ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி டோக்கியோ நகரத்தில் இடம்பெற்ற சர்வதேச விளையாட்டு விழாவில் அமெரிக்காவைச் சேர்ந்த மைக் பவெல் 29 அடி 4.5 அங்குலம் பாய்ந்ததன் மூலம் இச்சாதனை முறியடிக்கப்பட்டது.

## கார்ள் லூயிஸ்



1984ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் போது சிறந்த மெய்வல்லுநனராகப் பெயர் பெற்ற, கார்ள் லூயிஸ் ஓட்டப் பந்தயத்தில் புதிய திருப்பத்தை உண்டு பண்ணினார். ஒன்பது ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களுக்கு உரிமைக் காரரான இவர் ஒரே போட்டியில் 4 தடவைகள் தொடர்ச்சியாக வெற்றிபெற்றவராவார். லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் விழாவில் 100 மீ, 200 மீ 100 x 4 மீ மற்றும் நீளம் பாய்தல் ஆகிய நான்கு நிகழ்வுகளிலும் வெற்றிபெற்று இதற்கு முன் ஜெசிஓவன்ஸ் நிலைநாட்டியிருந்த உலக சாதனையை முறியடித்தார். 1988ஆம் ஆண்டு இவருக்கு 100மீ ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் கிடைத்தது. 1992ஆம் ஆண்டு பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் இதற்கு முன் மைக் பவல் ஏற்படுத்தியிருந்த தூரம் பாய்தலுக்கான சாதனையை முறியடித்துத் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

## ஜெசி ஓவன்ஸ்



ஜெசி ஓவன்ஸ் அமெரிக்காவின் திறமைமிகு மெய்வல்லுநர்களில் முக்கியமானவராவார். 1936ஆம் ஆண்டு பேர்லின் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது ஏழு தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தார். 100 மீ, 200மீ, நீளம் பாய்தல், 100 x 4 மீ அஞ்சலோட்டம், ஆகியவற்றில் தங்கப் பதக்கமும், 200 மீ, ஓட்டப் பந்தயத்தை 20.7 செக்கன்களில் பூர்த்தி செய்து உலக சாதனையையும் நிலைநாட்டினார்.

## கிளாசியஸ் கிளே



1942 ஜனவரி 17ஆம் திகதி பிறந்த கிளாசியஸ் கிளே குத்துச் சண்டை வரலாற்றுடன் இரண்டறக் கலந்தவராக இருந்தார். இவரது சொந்தப் பெயரான கிளாசியஸ் கிளே என்ற பெயரைவிட, முகமது அலி என்ற பெயரே பலருக்கும் தெரிந்ததாக இருந்தது. 1960ஆம் ஆண்டு முழு நேரக் குத்துச் சண்டை வீரராகத் தொழில் புரிந்த முகமது அலி, 1964ஆம் ஆண்டு உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றார். நிற பேதத்தினால் பாதிக்கப்பட்ட கிளாசியஸ் கிளே தனது பெயரை முகமது அலி என்று மாற்றி வைத்துக்கொண்டார். தொடர்ச்சியாகக் குத்துச் சண்டைச் சாம்பியன் பட்டத்தை விடாமல் சுவீகரித்துக் கொண்ட இவர் 1981ம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் எழுதிய 'எனது கதை' (My Own Story) என்ற நூல் எந்தளவுக்கு நிறபேதத்தால் பாதிக்கப்பட்டார் என்பதை உலகிற்கு உணர்த்தியது.

## ரே எவ்றி



பத்து ஒலிம்பிக் பதக்கங்களுக்கு உரிமைக் காரரான ரேமன்ட் கிளாரி எவ்றி ஒலிம்பிக் போட்டிகளில் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த சிரேஷ்ட விளையாட்டு வீரராவார். பாய்தல் போட்டிகளில் ஆர்வம் கொண்ட இவர் கோலூன்றிப் பாய்தல், நிளம் பாய்தல், உயரம் பாய்தல் முதலானவற்றில் சாதனைகளைப் படைத்தார். 1873 ஒக்டோபர் 14ஆம் திகதி பிறந்த இவர் சிறு வயதில் போலியோ வியாதியால் பாதிக்கப்பட்டவராவார். மிகுந்த உற்சாகம், முயற்சி, பயிற்சி என்பவற்றின் மூலமாக போலியோ நோயிலிருந்து மீண்ட எவ்றி 1890ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் நுழைந்து பொறியியலாளனாகப் பட்டம் பெற்றார். அதன் பின் விளையாட்டில் ஆர்வம் கொண்டு தனது 26 வயதில் மூன்று பாய்தல் போட்டிகளில் ஒரே தினத்தில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றெடுத்து 'மனித தவளை' என்ற பட்டத்தைப் பெற்றார். அதன் பின் பல ஒலிம்பிக் போட்டிகளிலும் பதக்கங்கள் வென்ற இவர் 1912ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுப் பொறியியலாளராகத் தொழில்புரிந்து வந்தார்.

## சேர்ஜி புபீகா



கோலூன்றிப் பாய்தலில் சிறந்த வீரராகத் திகழ்ந்த சேர்ஜி புபீக்காக சர்வதேச விளையாட்டு உலகத்தில் 1983ஆம் ஆண்டில் நுழைந்தார். இவ்வாண்டு இடம்பெற்ற சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் எதிர்பாராத விதத்தில் சாதனைகளை நிலைநாட்டினார். அப்போது அவர் 19 வயதை எட்டும் தறுவாயில் இருந்தார். அதன்பின் தொடர்ச்சியாக 14 வருடங்களாகக் கோலூன்றிப் பாய்தலில் தனது சாதனையை நிலைநாட்டினார். இன்னும் கூட எந்தவொரு மெய்வல்லுநர் போட்டியிலும் ஆறு சாதனைகளைப் படைத்த வேறொரு வீரரைக் காணமுடியாது. இவர் ஒரே போட்டியில் தான் நிலைநாட்டிய சாதனையை மீண்டும் புதுப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் இவர் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் ஒரு நிறைவேற்று அதிகாரியாக அங்கம் வகித்து வருகின்றார்.

கிளாசியஸ் கிளே என்பது வேறு யாருமல்ல 'முகமட் அலி' தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மரதன் வரலாறு'

கி.மு.430ஆம் ஆண்டு தாரியஸ் என்ற பர்ஸிய அரசன் தனது இராணுவத்தினருடன் கிரீசைக் கைப்பற்றி வந்தான். இவர்களது யுத்தம் மரதன் என்ற இடத்தில் நிகழ்ந்தது. பர்ஸிய இராணுவத்தில் 48,000 வீரர்கள் இருந்தனர். 12,000 பேர்கள் மட்டுமே கிரீசிடம் இருந்தனர்.

## மரதன் போர்


இவ்வாண்டு செப்டம்பர் 21ஆம் திகதி ஏதென்ஸ் இராணுவத்தின் 10,000 பேரும், பிளாட்டினியன் வீரர்கள் 1000 பேரும் பர்ஸிய இராணுவத்துடன் மோதினர். மரதன்பீட பூமியில் இடம்பெற்ற இவ்யுத்தத்தில் பர்ஸியர் வெற்றியடைவர் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் 8 நாட்களுக்குத் தொடர்ந்த யுத்தத்தின் பின் 9ஆம் நாள் பர்ஸியன் படை சிதறியோடியது.




## யுத்தத்தின் விசேட நிகழ்வுகள்

1. ஏதென்ஸ் இராணுவம் மத்திய பகுதியில் படை பலத்தைக் குறைத்து இரு புறமும் பலப்படுத்திக்கொண்டது.
2. பர்ஸியர் முன்சென்றபோது அதனை அனுமதித்துப் பின் சுற்றிவளைத்து ஏதென்ஸ் தாக்குதல் நிகழ்த்தியது.
3. கிரேக்க இராணுவம் பர்ஸியா இராணுவத்தைச் சூழ்ந்துகொண்டது.
4. இந்தத் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாத பர்ஸிய இராணுவம் சிதறி ஓடியது. பர்ஸியா 6,400 பேரும், கிரேக்கர்192 பேரும் இந்த யுத்தத்தில் மாண்டொழிந்தனர்.

## மரதன் பாதை




யுத்தத்தின் பின்னர் கிரேக்க படைகள் பர்ஸிய படைகளை விரட்டியத்தன. எனினும் இவ்வாறு பின்வாங்கிச் சென்ற பர்ஸிய படையினர் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும் ஏதென்ஸ் நகரத்தைத் தாக்கக் கூடும் என்று கருதியதால் விரைவாகவும், நீண்ட தூரம் ஓடக்கூடியவன் என்றும் தெரிவு செய்யப்பட்ட வீரனான பிடிப்பிடியஸ் என்பவனைத் தேர்ந்தெடுத்து தமது வெற்றியையும், ஏதென்ஸ் எதிர்நோக்கும் அபாயத்தையும் தெரிவிக்கும்படி ஏதென்ஸ் நகர் நோக்கி அனுப்பிவைத்தனர். இவ்வீரன் மரதன் நகரில் இருந்து ஏதென்ஸ் வரை 41,842 கிலோ மீற்றர் ஓடிச் சென்றான். எனினும் இவ்வாறு ஓடிச் சென்ற அவன் பின்னர் மூச்சடைத்து மரணமானான்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் முகமாகவே 1896ஆம் ஆண்டு மரதன் ஓட்டப் போட்டி ஒலிம்பிக் போட்டிகளில் உள்ளடக்கப்பட்டது.

### ஒலிம்பிக் இலச்சினை



ஒலிம்பிக் இலச்சினையில் காணப்படும் ஐந்து வளையங்களும் உலகின் ஐந்து பெருங்கண்டங்களைக் குறிக்கின்றன. இவை கிரேக்க வீர, வீராங்கனைகளுடன் ஒன்றிணைந்து கைகோர்த்துக் கொள்கின்றன என்பதனைச் சங்கேதமாகத் தெரிவிக்கின்றன.

ஒலிம்பிக் கைந்நூலை உங்களுக்கு வழங்குவோர்
தமிந்த விஜேசூரிய
காஞ்சன தஸாநாயக்க
பிரசாத் சம்பத்
நாமல் பத்திரகே

தமிழில்....
இரா.சடகோபன்
வி.ரெட்லி ஹெறிசன்
ஆர்.ராமலிங்கம்

பக்க வடிவமைப்பு
சமிந்த குமார திலக்க

மரதன் ஓட்டப் போட்டி ஒலிம்பிக் விழாவில் 1896ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஜய்

# ஒலிம்பிக் கள போட்டிகள்

குறுந்தூரம், மத்திய தூரம், நீண்ட தூரம் என ஓட்டப் பந்தயப் பிரிவுகளில் தடை தாண்டி ஓட்டங்களுடன் மொத்தம் 23 ஓட்ட நிகழ்ச்சிகள் ஒலிம்பிக் நிகழ்ச்சிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### ஆரம்ப ஸ்தானம்

ஓடும் பாதை 400 மீ. ஆக இருப்பதுடன் அது 8 இடைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஓட்ட வீரர்கள் இடப்புறம் நோக்கியே ஓடவேண்டும்.





ATHENS 2004



2000 ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற அமெரிக்க வீரர் மைக்கல் ஜோன்ஸன்


### தடை தாண்டல் நீர்த்தடை




தடைக்கம்பு 28 மற்றும் 7 நீர்த் தடைகளைத் தாண்டி ஓடவேண்டும்.


### ஓடும் பாதையில் முடக்குகள்

அடிப்படைப் போட்டியில் மிகுந்த திறமைகளைக் காட்டும் வீரர்களுக்கு 4வது மற்றும் 5வது ஓடு பாதைகள் பெற்றுக் கொடுக்கப்படும். இவற்றால் சில நன்மைகள் உண்டு.



### தடைக் கம்பு தாண்டுதல்

சகல வீரர்களும் 10தடைக் கம்புகளைத் தாண்டி ஓடவேண்டும். தாண்டும் போது தடைக்கம்பு வீழ்ந்தால் தண்டம் கிடையாது.




### உதவி ஓட்டம்

பல கட்ட ஓட்டப் பந்தயத்தில் இறுதிக் கட்டத்தில் பங்குபற்றும் ஓட்ட வீரர் தடியை மாற்றும் கட்டத்தில் கட்டாயமாக உதவி ஓட்டம் ஓடவேண்டும்.




REUTERS

2004 ஒலிம்பிக் விழா - கிரீஸ், ஏதென்ஸ்

அட்டவணை

ATHENS 2004

பதக்க அட்டவணை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| 1 அமெரிக்கா | | | |
| 2 சீனா | | | |
| 3 | | | |

இப்பத்திரிகை கொழும்பு 02, இல.08, ஹுனுப்பிட்டிய குறுக்குவீதி, விஜய நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2004 ஓகஸ்ட் 16ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org